# தமிழர் தகவல்
இலண்டன்

## Tamils' Information


ஜுன் 2006

மாத சோதிடம்
உள்ளே




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


Lakshmis
Eastham-ல்
தமிழர் தகவல்
இலவச இதழை
பெற்றுக்கொள்ளுங்கள்
இலண்டனில்
தரமான
தங்கத்திற்கு
Lakshmis
Jewellers
276 High Street North London E12 6SA UK Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448

# தமிழர் தகவல் Tamils' Information

ஜூன் 2006 மலர் : 03 இதழ் : 36


" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். " - குறள்

## இயலாமையுள் வெளிவரும் இறைமை!

2002இல் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்ததை உலகம் அறியும். அது புரிந்துணர்வா, சமாதானமா, போர்நிறுத்தமா என்பது இன்னும் புலப்பட்டுவராத உண்மை. யதார்த்தபூர்வமாக சமவலுவைத் தக்க வைத்துக் கொண்ட சம்பவம் இது. விடுதலைப் போரில் வெற்றியின் விளிம்பில் நிற்கும் ஒரு பலமான அமைப்பை - அவர்கள் செயற்பாட்டை பயங்கரவாதமெனப் பறைசாற்றி, ஆட்சியில் இருக்கும் அரசைக் காப்பாற்றும் கபடத்தனச் செயற்பாடுகளில் ஏகாதிபத்தியங்கள் இறங்குவது வரலாற்று உண்மைகளாக உள்ளன.

அண்மையில் இவர்களால் அவிழ்த்துவிடப்பட்ட புதிய சர்ச்சை 'இறைமை' என்பது. இறைமை என்றால் என்ன? இதன் எண்ணக்கரு இருவகைப்படும். ஒன்று இறைமையின் உறைவிடம். மற்றையது அந்த இறைமையைப் பிரயோகிப்போர் யார் என்பது. விளக்கம் வேண்டுமாயின், போடின், லொக், ரூசோ, ஒஸ்ரின் போன்றோர்களின் படைப்புக்களைப் படிக்க வேண்டும். ஒரு நிலப்பரப்பின் கட்டுப்பாட்டையும் காவல் சட்டங்களையும் கொண்டிருப்பவர்களுக்கு அந்த நிலப்பரப்பினையொட்டிய நீர்ப்பரப்பினையும் வான்பரப்பையும் வரித்துக் கொள்ளும் உரிமை வழக்கமாகிறது. இது பெறுபேறாகப் பெற்றது. எதற்காகவும் எவர்க்கும் விட்டுக் கொடுக்கவேண்டிய தேவை இல்லாதது, வட இலங்கையின் வெற்றிலைக்கேணி கடல்பகுதியில் நடந்த நிகழ்வுக்குக் கண்காணிப்புக் குழு 'இறைமை' பேச வேண்டிய உரிமை இல்லை. அது அவர்களின் அத்துமீறிய நுழைவு. வடமுனையைப் பலப்படுத்த வந்த இலங்கை இராணுவத்திற்கு வழித்துணை தருவதற்கு இந்த கண்காணிப்புக் குழுவுக்கு அதிகாரம் யார் கொடுத்தார்கள்? கிழக்கிலிருந்து புலிகள் தங்கள் கடல் எல்லையில் வர வழித்துணை தர மறுத்தவர்கள் படைக்குத் துணைவருவது எந்த 'இறைமை'யின் அதிகாரம் ஆகும்? போர் நிறுத்தம் என்ன, பெரும்பான்மை இனத்தினதும் அரசினதும் நல்லெண்ணத்தில் ஏற்பட்டதா? களத்தில் வெற்றி பெறமுடியாத இயலாமையின் வெளிப்பாடால் உருவானதுதான் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. அந்த இயலாமைக்கு இப்போது கண்காணிப்பாளர்கள் சூட்டும் புதிய பெயர்தான் இறைமை. இது நகைப்புக்கிடமான நடவடிக்கை.

இதை எழுதும் கடைசி நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைவந்து விட்டதை அறிகிறோம். புலிகளுக்கு வழங்கப்பட்ட இந்த அழுத்தத்தால் அவர்கள் பேச்சு மேடைக்கு வருவார்கள் என்கிறார் இலங்கை ஜனாதிபதி. ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளும், சிங்களக் கடும் போக்காளர்களும், சிங்கள அரசும் இதுபற்றி மார்தட்டி கொள்வதையும் பார்க்க முடிகிறது. ஆனால் புலிகள் இதுபற்றிப் புலம்ப மாட்டார்கள் என எண்ணுகிறோம். ஏனெனில் வருங்காலத்தை உணர்ந்துள்ளவர்கள். அவர்களின் காலடிகள் எப்போதும் அளந்தே வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. கடந்த காலங்கள் அப்படித்தான் இருந்திருக்கின்றன. தடைகள் தமிழீழத்தின் வரவினைத் துரிதப்படுத்தும் என்று எண்ணுகிறவர்கள் நாங்கள். ஆகவே அதுபற்றி அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. தமிழினத்துக்குக் காலத்துக்கு காலம் ஏற்படும் சோதனைகள் வெற்றிகரமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனால் கண்காணிக்க வந்த குழுவினர்தான் கலக்கமடையப் போகிறார்கள். அவர்களது கண்காணிப்பு ஒரு பக்கச்சார்பானது என்பது இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டபின் எமக்கு அவர்கள் சேவை தேவைதானா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாமல் போகும். அவர்கள் மூட்டைகளை கட்டும் காலம் வந்துவிட்டது. ஒரு உண்மையை உணருவோமா? பேச்சுக்குப் போயப் பெற்ற பாலஸ்தீனத்தின் சுதந்திரம் என்னவானது? பேச்சின் மூலம் சுதந்திரப் பிரகடனம் செய்த கிழக்குத் திமோரின் இன்றைய நிலை என்ன? சுதந்திரம் பேராடிப் பெறவேண்டியதுதான். கேட்டுப் பெறுவதல்ல. அதுதான் குருசேத்திரத்தின் தீர்ப்பாக இருந்தது. பகவத் கீதையின் பதிலாகவும் அமைந்திருந்தது.

\- - - - - - - - -

இலங்கைக்குச் சமாதானம் ஏற்படுத்தும் புதிய நோர்வே தூதுவர் 'ஹென்சன் போவர்' பற்றி சில ஆய்வுகள் : இலங்கையில் நடைபெற்ற யுத்த நிறுத்த காலத்திலும் ஐரோப்பிய ஒன்றியம் 'புலிகளைத் தடை செய்தல்' என்ற கோசத்தை எழுப்பியே வந்திருக்கிறது. அப்போதெல்லாம் அதை அமுக்கமாக்கிய பெருமை நோர்வேக்கும் அதன் சிறப்புத் தூதுவர் சொல்ஹெயிமுக்குமே இருந்தது. இப்போது சமாதான காலத்தில், தமிழர் பகுதியெங்கும் இரத்தவாடை வீசும்போது ஏற்பட்டிருக்கும் இந்த தடை நாடகம்? அதைப் போவர் புரிந்து கொண்டதாக காட்டிக் கொள்ளவேயில்லை. சொல்ஹெயிம் ஒரு அரசியல்வாதி. அமெரிக்க வல்லாதிக்கத்திடம் விருப்புடன் மண்டியிடாத ஒரு சோசலிசவாதி. இலங்கைப் பிரச்சினையும் ஈழப்போராட்டமும் அவருக்கு அத்துப்படி. ஹன்சன் போவர் அரசியல்வாதி அல்லர். அவர் ஒரு அரச அலுவலர். அதுவும் அமெரிக்க கல்வி பெற்ற புத்திஜீவி. உரிமைப்போராட்டங்களை உரசி உணரும் தன்மை அவருக்கில்லை. ஒரு அரசியல் பிரச்சினையை அரச அதிகாரி பார்க்கும் கோணம் வேறுபட்டிருக்கும். இந்த உண்மைகள் எம்மால் ஏற்கனவே பக்கத்துவீட்டால் உணர்த்தப்பட்டவை. அரசையும் புலிகளையும் சமநிலையில் பார்க்கும் பார்வை அவரிடம் இல்லை என்று ஏற்கனவே எம்மவர்களால் உணரப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய அழுத்தமும் வெற்றிலைக்கேணி இறைமைச் சர்ச்சையும் இவற்றுக்கான உதாரணங்கள். இனி புலம்பெயர் தமிழர்கள் பணியில்தான் போவரின் குட்டு வெளிப்படும்.

\- ஆசிரியர்


முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval

படைப்புகள் ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்


தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்

வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !

The Value of your Money

AEL Money Services

That's Abby Money

விடுமுறையை கழிக்க
சென்னைக்கு
போறீங்களா ?

வசதியாக குடும்பத்தோடு தங்க
Non A/c Flatகள்
A/c Flatகள்
திருமணத்தை நடாத்துவதற்கான ஏற்பாடுகள்
வாகன வசதிகள்
அனைத்துக்கும்
07801227110

உங்கள் உறவுகளுக்கு உலகின் எப்பாகத்துக்கும்
பணமாற்றீடு செய்ய சிறந்த நிறுவனம்

# ABBY EXCHANGE LIMITED

**928 Garratt lane**
**Tooting Broadway, London SW17 0ND**
**Tel : 020 8672 0266 / 8672 7743**
**Fax : 020 8488 3114**

தமிழர் தகவல் இலவச இதழை
எங்களிடம்
பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புகட்கு
M SRI





22 ct Gold & Diamonds

784 London Road
Thornton Heath
Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323

Ambaal Jewellers

Pathmini Jewellers

892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8556 1111
Fax : 020 8664 8999



New Mot Station Open !

CA

Capital Autos Ltd.

Accident Repair Centre &
General Services & Repairs to all Makes and Models

51A Milton Avenue East Ham London E6 18G

Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147 www.capitalauto.com

- Fully equipped M.O.T. & accident repair centre
- Insurance repairs welcome
- Recovery Service
- Approved insurance repairs
- Courtesy vehicle available For most repairs
- Professional friendly service and advice
- Collection & deliver within the local area


**BMW MERCEDES**
**VAUXHALL**
**HONDA**
**VOLKSWAGEN**
**NISSAN Ford**

இலண்டனில்
எந்த இடத்தில் இருந்தாலும்
உங்கள் வாகனத்
திருத்த வேலைகளுக்கு
நீங்கள் செல்ல வேண்டிய
இடம்

Hurry - Limited Offer !

Reg : ________
Model : ________
Name : ________
Tel : ________

£ 10 OFF Your M.O.T !




இவர்களின் விளம்பரத்தை
IBC ttn
வானொலி
தொலைக்காட்சியில் கேளுங்கள்

தமிழர் தகவல் இலவச இதழை
எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்

BASED ON CURRENT M.O.T.FEE OF £42.10
• OUR VOUCHER PER CAR ONLY

# தமிழர் தகவலின் சாதனை

இந்த இதழுடன் மூன்று வருட அகவையின் முடிவில்

**3வேது இதழாக** வெளிவருகின்றது

## ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் பிரதிகள்

லண்டன்வாழ் தமிழர் கரத்தில்

தொடர் விளம்பரத்தில் டைமண் – மிதூஸ், தாரணி, மீரா நகை மாளிகை,
லிங் எயர் றவல் ஏஜன்ட், லூயிசம் மகராசி, ஏ.ஜே. வீடியோ, கற்பகம்

*காலத்துக்கு காலம் தேவையேற்பட்ட வேளையில் அன்புக்கரம் நீட்டியவர்கள் :*

லட்சுமி ஜுவலர்ஸ், ஜே. கே. கோல்ட் ஹவுஸ், பத்மினி ஜுவலர்ஸ்
அம்பாள் ஜுவலர்ஸ், ரூட்டிங் பிரைம் புட்ஸ், குமரன்ஸ், கேப்பிட்டல் ஓட்டோஸ்
பெஸ்ட் புட் சூப்பர் மார்க்கெட், சட்டத்தரணிகளான மார்கண்டன்
சிறிகாந் அண்ட் கோ, இந்திரா செபஸ்தியன், எம்.கே. சிறி
இவர்களுடன் இன்னும் பல அன்பு நெஞ்சங்கள்

# இவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள்

## தமிழர் தகவல் வாசகர்களே

எங்கள் விளம்பரதாரர்களிடம் தமிழர் தகவலைப் பெற்றுக் கொள்ளுங்கள்
இவர்களுடன் லூயிசம் சிவன் கோயில், ஆர்ச்வே முருகன் கோயில்
ஈஸ்ட்காம் முருகன் கோயில், ஈலிங் கனக துர்க்கை அம்மன் கோயில்
ரூட்டிங் முத்து மாரியம்மன் ஆலயம்
ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.


Euro Travels
&
Tours ltd
111-B Loampit Vale, Lewisham
London SE13
Tel : 0208 465 9666
Fax : 0208 465 9888
தமிழில் தொடர்புகட்கு :
தி. அருள்தாஸ்


KATPAGAM
புதிய பொலிவுடன் லூசியத்தில்
ஞாயிறு தோறும் உடன் பங்கு
ஆட்டிறைச்சி சகலவிதமான
மரக்கறி வகைகள்
பழவகைகள் உட்பட
சகல தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்
கற்பகம்
36, Loampit Hill, Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810
துரிதப்
பணமாற்றுச் சேவை
ரஞ்சன்
இலண்டன்


EVEREST
Curry King
24 Loampit Hall Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
Sea Food
&
Vegetarian
Specialist
Breakfast
Lunch
Dinner


புதிய நிர்வாகத்தின் கீழ்
Maharasie Jewellers
மங்கையரின் மனங்களைக் கொள்ளை கொள்ளும்
நவநாகரீக நகைகளின் தங்கச் சுரங்கம்
122 Loampit Vale Lewisham
London SE13 7SN Tel : 020 8691 8888


Video Audio
14 Lompait Hill, Lewisham London SE13
Tamil, Malayalam, Hindi,
Telugu Films, Tele Drama
Devotional Carnatic,
Classical Cd's
Tamil Magazines,
News Papers, Phone Cards



GJ Video Club
TAMIL, HINDI, TELUGU, SINGALA
VHS VCD & DVD WHOLESALE & RETAIL
Tel : 020 8471 6500
ஜி ஜெ
விடியோ
மாபெரும் மலிவு விற்பனை
5 ஜங்கரன் DVD £ 20
5 Audio cassette £ 10
5 VHS £ 10
4 VCD £ 10
(தெரிவு செய்யப்பட்டது மட்டும்)
317, High Street North, ManorPark London E12 6SL


Kumarans
குமரன்ஸ்
TEXTILES
136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444
020 8530 3033
Fax : 020 8521 9444

# நாணிச் சிரிப்பாளே

என்ன அழகு
எத்தனை பிரகாசம்
எட்டிப் பார்த்தாள்
எதற்கு முக்காடு
மதம் மாறிவிட்டாளோ – மனதில்
சில கேள்விகள்
நீலச் சேலையில்
அழகாயிருந்தாள்
வெள்ளைத் தாவணியிலும்
வடிவாயிருந்தாள்
வேகமாய் வீசிய காற்றில்
அவள் ஆடைகள்
என் மனதில்தான்
எத்தனை கற்பனைகள்
கோவில் கண்டேன்
கடை வீதியில் கண்டேன்
கனவிலுங் கண்டேன்
அவளுக்கும் என் மீது காதலா
இல்லையேல் இது ஒருதலைக் காதலா ?
மறுநாள்
மொட்டை மாடியில் நின்று
முழு அழகையும் கண்டேன்
அங்கே குளித்துக் கொண்டிருந்தாள்
அவள் அழகிய உடலில்
பட்டுத் தெறித்த நீர்த் துளிகளின்
நினைப்போடு
மழையில் நனைந்தேன்
ஏனோ இன்று
அவளைக் காணவில்லை
எங்கும் தேடினேன்
எங்கேதான் போனாளோ
அவள் இல்லாத நேரம்
இல்லாத பொல்லாததெல்லாம் சொல்லி
வெள்ளியாய்ச் சிரிக்கிறார்களே
அவள் தோழிகள்
ஓ அவளும்
பருவப் பெண்தானே – அதுதான்
மாதத்தில் சில நாட்கள்
தூரத்தில் என்பதால்
மறைந்தே இருப்பாளோ
நாளைக்கு வரட்டும்
கேட்டுப் பார்க்கிறேன்

ஆவரங்கால் – மீரா





மாதமிரு திருக்குறள் கற்போம்

## அறிவுடைமை !

" சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு" (குறள்: 422)

தமது ஐம்பொறிகளையும் மனம் போனபோக்கில் போகவிடாது தீயவற்றினின்றும் தடுத்து நீக்கி நல்லவற்றில் செலுத்துவது அறிவாகும். ஐம்பொறிகளின் வழி ஓடுவது மனம். அதைத்தடுத்து நிறுத்தி நல்வழி பார்த்துச் செலுத்துவது அறிவு.

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்: 423)

எந்தப்பொருளை யார் ஒருவர் சொல்லக்கேட்டாலும், அங்ஙனம் கேட்டபடியே கொள்ளாமல், அப்பொருளின் மெய்மைத் தன்மையை ஆராய்ந்தறிவது அறிவாகும்.

# WOULD YOU LIKE TO **SAVE UP TO 90%** ON YOUR **INTERNATIONAL** CALLS?

For great International call rates switch to Vx Home Account and discover the benefits!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Australia | | 2p | Mauritius | | 10p |
| Bahrain | | 14p | New Zealand | | 2.5p |
| Canada | | 2p | Oman | | 16p |
| China | from | 2p | Pakistan | from | 6.5p |
| Europe | | 2.5p | Qatar | | 24p |
| India | | 8p | Russia | | 4p |
| Indonesia | | 3.5p | Saudi Arabia | | 6p |
| Israel | | 2.5p | South Africa | | 5p |
| Japan | | 3.5p | Sri Lanka | | 6p |
| Kuwait | | 8p | UAE | | 18p |
| Malaysia | | 2.5p | USA | | 2p |

**Competitive rates for all countries**
The above rates are based on calls made from 0207 / 0845 access numbers and include VAT.

**Open an account with £25 and receive £5 worth of talk time absolutely free plus receive up to £5 worth of free talk time, every time you recommend a friend.**

**THINK FAST! THINK SMART!**
**SWITCH TO VX HOME ACCOUNT AND SAVE MORE!**

**THE OFFICIAL AIR TIME PROVIDER**
**for the Sri Lankan Cricket Team**
**for this summer's England tour**

Sri Lanka Cricket

**Why you should choose Vx Home Account**

- 6 digits pre-fix number for hassle free dialling.
- Per Second Billing.*
- Free, 24 hour, Customer Care 365 days a year.
- No connection or maintenance charges.
- No credit expiry dates.
- Pre-paid accounts to suite everyone's pocket.
- Free fully itemised online billing.
- Access your account from home, office, friends or mobile phone.
- Use from your mobile phone to save even more.
- International roaming over 20 countries worldwide.
- Compatible with BT or Cable.
- Instant connection.
- No contract to sign - No minimum period of commitment.
- Top-up anytime you want over the telephone or internet.
- No need to change your phone, line or number.

## to SRI LANKA ONLY 6P!

## from SRI LANKA ONLY 5P!

Vx HOME
*Add wings to your voice...*

# EVEN LOWER RATES FROM YOUR MOBILE

For great International call rates switch to Vx Home Account and discover the benefits!



**YOU CAN NOW ENJOY**
EVEN LOWER INTERNATIONAL RATES WHEN CALLING FROM YOUR MOBILE !
USE OUR UNIQUE MOBILE ACCESS NUMBER AND BENEFIT FROM DISCOUNTED RATES TO ALL INTERNATIONAL DESTINATIONS !

**07744 777 888**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Australia | | 1/2p | New Zealand | | 1p |
| Canada | | 1/2p | Pakistan | | 5p |
| China | | 1p | Russia | | 2.5p |
| Europe | | 1p | Saudi Arabia | from | 4.5p |
| India | | 6.5p | Singapore | | 0.5p |
| Kenya | from | 8.5p | South Africa | | 3.5p |
| Kuwait | | 6.5p | Sri Lanka | | 4.5p |
| Japan | | 2p | Thailand | from | 2.5p |
| Malaysia | | 1p | UAE | | 16.5p |
| Mauritius | | 8.5p | USA | | 1/2p |

**Competitive rates for all countries.** The above rates are based on calls made from 07744 777 888 access number and include VAT.

## SRI LANKA ONLY 4.5P!
**from your mobile**

**THINK FAST! THINK SMART!**
**SWITCH TO VX HOME ACCOUNT AND SAVE MORE!**

Vx HOME
*Add wings to your voice...*

**For more information, please contact our free 24 hour customer service on**

**0800 989 0002 OR 020 7952 0106**

*Discounted rate applies only when making a call from a UK mobile to a landline or mobile abroad using the access number 07744 777 888. The cost of dialling this access number will depend on your mobile phone tariff plan. Please check with your mobile service provider the cost for dialling this number and whether you can use your inclusive free cross network minutes. Please ensure you have sufficient inclusive free minutes. *Per second billing for Gold Card customers only.



## ஈழ மக்களின் மற்றுமொரு திரைக்காவியம்

# ஓர் இதயத்திலே

**தீபாவளி வெளியீடு**

தமிழீழ அகதிகள் புலம்பெயர் நாடுகளில் தமிழ் சினிமா தயாரிப்பதில் முன்னணியில் நிற்கின்றார்கள். ஈழத் தயாரிப்பான மண் திரைப்படம் தற்போது லண்டனில் பல இடங்களில் திரையிடப்படுகின்றது. இந்த நிலையில் மற்றுமொரு திரைப்படம் லண்டனில் தயாராகிக்கொண்டிருக்கின்றது. ஊர்காவற்துறை - கரம்பனைச் சேர்ந்த ஸ்ரான்லி மனுவேற்பிள்ளை இத்திரைப்படத்தைத் தயாரிக்கின்றார். முற்றிலும் லண்டனில் எடுக்கப்படும் இப்படம் கனடாவின் பிரபல ஒளிப்பதிவாளர் திரு ரவி அச்சுதனின் கமராவின் கைவண்ணத்தில் உருவாகின்றது. கதை, திரைக்கதை, வசனம் பாடல் நெறியாள்கை தயாரிப்பு என்பவைகள் ஸ்ரான்லி மனுவேற்பிள்ளையினால் கையாளப்படுகின்றது. மனைவியை இழந்த பேராசிரியர் ஒருவரின் வாழ்வை மையமாகக்கொண்டு ஓர் இதயத்திலே என்ற பெயரில் விரைவில் வெள்ளித்திரைக்கு வரவிருக்கும் இப்படத்தில் பேராசிரியராக ராஜ் மனுவேற்பிள்ளை நடிக்கின்றார். பிராமண வேடத்தில் நடிக்கும் டைரக்டர் ஸ்ரான்லி மனுவேற்பிள்ளையையும் திருமதி ராஜியையும் இப்புகைப்படத்தில் காண்கிறீர்கள்.

## திருச்சி கலைக்காவேரி மாணவர்கள்
## நவராஜ் சாருமதி
## வழங்கும்
# பல்சுவை நாட்டிய நிகழ்ச்சி



**இவர்களின் நாட்டிய நிகழ்ச்சியை நடத்த விரும்புபவர்கள் தமிழர் தகவலுடன் தொடர்பு கொள்ளவும்**

# பார்வை உள்ளவர் யார்?

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

ஒரு தெருவில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ ஒரு உயரமான கல்லை நடுத்தெருவிலே நிறுத்தி வைத்து அதைச் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

அது என்ன விளையாட்டோ ?

அவர்களுக்கே வெளிச்சம்.

கொஞ்சநேரம் அப்படியே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

விளையாட்டு முடிந்தது. அந்தக் கல்லை அப்படியே நடுத்தெருவில் விட்டுவிட்டு அவரவர்கள் வீட்டுக்கு ஓடிப் போய்விட்டார்கள்.

அந்தக் கல் நடுத்தெருவில் அப்படியே நின்று கொண்டிருந்தது.

கொஞ்சநேரத்தில்

அந்த வழியாக இரு பெண்கள் ஏதோ பேசிக் கொண்டே வந்தார்கள். பேச்சு சுவாரசியத்தில் கல்லை கவனிக்கவில்லை.

அது காலில் இடித்துவிட்டது.

வலி தாங்கமுடியவில்லை.

காலில் இடித்துக் கொண்ட பெண் திட்ட ஆரம்பித்தாள்.

வரவர ஊரு உலகம் ரொம்பக் கெட்டுப்போச்சு. யாருக்கும் கொஞ்சம் கூடப் பொறுப்பே கிடையாது. பாரு... இப்படி நடுத்தெருவில் பொறுப்பில்லாம இந்தக் கல்லைப்போட்டு வச்சிருக்காங்களே... இது நியாயமா ? அக்கிரமம்... அநியாயம் !

இப்படியாக இந்தச் சமூகத்தை கடுமையாக விமர்சனம் செய்துகொண்டே அவர்கள் போய்விட்டார்கள்.

கொஞ்ச நேரம் கழித்து ஒரு இளைஞன் அந்த வழியாக வந்தான். அந்தக் கல்லைப் பார்த்தான். நின்றான்.

ஒரு கணம் யோசித்தான்.

என்ன பண்ணலாம் என்று பார்த்தான். தன்னுடைய வீரத்தையும், உடல் வலிமையையும் காட்ட வேண்டுமென்று நினைத்தான்.

கொஞ்சம் பின்னால் போனான். பிறகு வேகமாக ஓடி வந்தான்.

ஒரு சின்னத் துள்ளல்... அப்படியே அந்தக் கல்லைத் தாண்டி அப்பால் குதித்தான்.

அதன் பிறகு விசிலடித்துக் கொண்டே ஒரு மாதிரியாக நடந்து போய்விட்டான்.

அடுத்தபடியாக ஒரு காதல் ஜோடி அந்தப் பக்கமாக வந்தது.

இருவரும் மிக நெருக்கமாக ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தபடி வந்து கொண்டிருந்தார்கள். நடுத்தெருவில் நின்று கொண்டிருந்த கல் அவர்கள் கண்களில் பட்டது.

அந்தக்கல் நடுவில் இருப்பதால் இருவரும் சற்று விலகி மறுபடி அந்தப் பக்கம் போய் இணைந்து செல்லவேண்டும்.

கொஞ்ச விநாடிகள் நாம் பிரிய வேண்டியிருக்கிறதே என்று வருத்தத்தோடு முணுமுணுத்துக் கொண்டே விலகினார்கள். பின் மறுபடியும் சேர்ந்தார்கள். அதன் பிறகு அவர்கள் தங்கள் எதிர்கால கற்பனைகளைச் சுமந்தபடி நடந்து சென்றார்கள்.

கடைசியாக அந்த வழியாகப் பார்வையில்லாத ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவர் கையில் வழக்கமாக வைத்திருக்கிற அந்த வழி காட்டும் ஊன்றுகோல்.

கையிலிருக்கிற அந்த ஊன்றுகோலால் தனக்கு முன்னால் அப்படியும் இப்படியும் தட்டிப் பார்த்துக் கொண்டே அவர் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தார். வழியிலே இருக்கிற கல் குச்சியிலே தட்டுப்பட்டது.

உடனே அவர் நடுத்தெருவிலே ஒரு கல் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டார்.

உடனே குனிந்தார்.

அந்தக் கல்லைத் தடவிப் பார்த்தார். மெல்லத் தூக்கினார். பாதை ஓரமாகக் கொண்டு போட்டார். அதன் பிறகு நிம்மதியாகத் தன் வழியே அவர் நடந்து போனார்.

நண்பர்களே...

இப்போது கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தப் பாதையில் கொஞ்ச நேரம் பல பேர் வந்து போனார்கள். அவர்களில் பார்வை உள்ளவர் யார் ? பார்வையில்லாதவர் யார் ?

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள் ?

இன்றைக்குப் பல பேர் அப்படித்தான் இருக்கிறார்கள்.

ஒரு பெரியவர் உபதேசம் செய்து கொண்டிருந்தார்.

நாம் தினமும் ஒரு நல்ல காரியமாவது செய்ய வேண்டும்.

எதிரே இருந்தவர் சொன்னார்.

ஐயா ... நான் இன்றைக்கு இரண்டு நல்ல காரியங்கள் செய்தேன்.

அப்படியா ... மகிழ்ச்சி. என்ன அது... சொல்லுங்கள்.

வருகிற வழியிலே ஒரு பாறாங்கல் கிடந்தது. அதை எடுத்து ஓரமாய்ப்போட்டேன்.

மிக மிக நல்ல காரியம். அடுத்தது ?

பாதை ஓரமாய் பெரியவர் ஒருவர் அடிபட்டுக் கிடந்தார். அவரைக் கொண்டு போய் ஆஸ்பத்திரியிலே சேர்த்தேன்.

ஆகா ... அற்புதம். அது சரி... அவருக்கு எப்படி அடிபட்டது?

நான் தூக்கிப் போட்ட கல் அவர் மேலேதானே விழுந்தது. ●



# தமிழகச் சட்டமன்றத் தேர்தல் - 2006



**1967** தொடங்கி, தமிழ்நாட்டில், தி.மு.க, அ.தி.மு.க, ஆகிய இரு கட்சிகள் மட்டுமே ஆளுங்கட்சியாகும் வாய்ப்பைப் பெற்று வருகின்றன. இம்முறை தி.மு.கவை மக்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி யுள்ளனர்.

தி.மு.கவின் வெற்றிக்கு முக்கியமான காரணங்கள் இரண்டு

1) அக்கட்சியின் தேர்தல் அறிக்கை
2) கூட்டணி வலிமை

இதுவரை எந்தத் தேர்தலிலும், தேர்தல் அறிக்கை இவ்வளவு முதன்மை பெற்ற தில்லை. கட்சியைப் பொறுத்தும், வேட்பாளரைப் பொறுத்தும்தான் மக்கள் வாக்களிப்பது வழக்கம். இம்முறை தி.மு.கவின் தேர்தல் அறிக்கையால் ஈர்க்கப்பட்டு, வாக்களித்தோர் எண்ணிக்கை கூடுதலாகத் தெரிகிறது. இது ஒரு நல்ல முன்னுதாரணமாக அமையும். இனி வரும் காலங்களில், ஒவ்வொரு கட்சியும் தன் தேர்தல் அறிக்கையில் கூடுதல் கவனம் செலுத்த வாய்ப்புள்ளது.

கடைசி நேரத்தில், ம.தி.மு.கவும், சரத்குமார், ராதிகா போன்ற நடிகர்களும் தி.மு.க கூட்டணியை விட்டுப் பிரிந்து போனாலும், அந்தப் பிரிவுகள், தி.மு.க அணியைப் பாதிக்கவில்லை என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள், வேறு சில செய்திகளையும் நமக்கு உணர்த்துகின்றன.

1. ம.தி.மு.கவின் செல்வாக்கில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. பா.ம.க, விடுதலைச்சிறுத்தைகள் ஆகிய கட்சிகளுக்கும் சரிவு ஏற்பட்டுள்ளது.
2. நடிகர் விஜயகாந்த் தொடங்கி யுள்ள கட்சிக்கு எதிர்பாராத ஆதரவு கிடைத்துள்ளது.
3. தேர்தல் புறக்கணிப்பு வேண்டுகோள் மக்களிடம் எடுபடவில்லை. சென்ற சட்டமன்றத் தேர்தலில் 59 விழுக்காடு வாக்குகள் மட்டுமே பதிவாகி இருக்க, இப்போது 70 விழுக்காடு வாக்குகள் பதிவாகியுள்ளன.

இவற்றிற்கான காரணங்கள் தெளிவாகவே தெரிகின்றன.

தி.மு.க அணியை விட்டு ம.தி.மு.க பிரிந்ததைக் கூட மக்கள் தவறாகக் கருதவில்லை. ஆனால், முதல் இரண்டு ஆண்டுகள் கடுமையான சர்வாதிகார ஆட்சி நடத்திய அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்ததை மக்கள் ஏற்கவில்லை. அதுவும் கடைசி நேரத்தில் அவ்வாறு செய்ததன் மூலம், நம்பகத் தன்மையை ம.தி.மு.க முழுமையாக இழந்துவிட்டது. அதன்பிறகு நடை பெற்ற தேர்தல் கூட்டங்களில், வைகோ பேசிய பேச்சுக்களும் அவர் கட்சிக்கு எதிர்மறை விளைவையே கொடுத்தன. வரலாற்றுச் சான்று களுடன், கண்ணியமான அரசியல் பேசக்கூடிய வைகோ, இம்முறை சன் தொலைக்காட்சி பற்றியும், தயாநிதி மாறன் பற்றியும் மட்டுமே பேசிக் கொண்டிருந்ததை மக்கள் ரசிக்கவில்லை.

பா.ம.க, விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய இரு கட்சிகளுக்கும் சாதியப் பின்னணியே, அவர்களின் பலமாகவும், பலவீனமாகவும் அமைந்துவிட்டது. ஈழத்தமிழர் ஆதரவு, தமிழ்ப்பாதுகாப்பு ஆகியவற்றில் இணைந்திருந்த அவர்கள், தேர்தல் களத்தில் பிரிந்து நிற்க நேர்ந்ததும், ஒரு பலவீனமாகவே ஆனது.

விஜயகாந்த் பெற்றுள்ள வெற்றிக்கு, வெவ்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

அவருடைய திரைப்படப் புகழ், ஒரு காரணம் என்றாலும், அதுவே முழுமையானது என்று கூற இயலாது. அவரைக் காட்டிலும் புகழ் பெற்ற சிவாஜிகணேசனால் தமிழகத் தேர்தல்களில் வெற்றி பெற இயலாமல் போனதை நாம் அறிவோம். டி.ராஜேந்தர், பாக்கியராஜ், கார்த்திக் முதலியோரின் அரசியல் அனுபவங்கள் கசப்பாகவே உள்ளன. 2004 நாடாளுமன்றத் தேர்தலில் மிகப் புகழ் பெற்ற ரஜினி வாய்ஸ் கூட எடுபடவில்லை. எனவே, விஜயகாந்த் வெற்றிக்கு வேறு காரணங்கள் உள்ளன என்றே தோன்றுகிறது.

தி.மு.க, அ.தி.முக என்னும் இரு கட்சிகளையும், அவற்றின் கூட்டணிகளையும் தாண்டி, மூன்றாவது கட்சி வரவேண்டும் என்று எண்ணக்கூடியவர்கள், இன்று குறிப்பிடத்தக்க அளவில் உள்ளனர். குறிப்பாக இம்முறை புதிதாக வாக்களித்திருக்கும் 18 முதல் 24 வயதுக்கு உட்பட்ட இளைய வாக்காளர்களிடம் அந்த எண்ணம் கூடுதலாக உள்ளது. அவர்களில் பெரும் பகுதியினர் அவர் கட்சிக்கு வாக்களித்துள்ளனர்.

தே.மு.தி.க என்னும் கட்சி, கடந்த செப்டம்பரில்தான் தொடங்கப்பட்டது என்றாலும், கடந்த பஞ்சாயத்துத் தேர்தலிலேயே, தன் ஆதரவாளர்களுக்குப் பண உதவி செய்து, தேர்தல் களத்தில் விஜயகாந்த் பங்கேற்கத் தொடங்கிவிட்டார். மேலும், தன் ரசிகர் மன்றங்களை, அரசியல் கட்சியின் கிளைகளாகக் காட்டும் முயற்சியும் ஏற்கனவே



தொடங்கிவிட்டது. இவ்வாறு களப்பணிகளிலும் ஓரளவு ஈடுபட்டதும், அவர் கட்சி வாக்குகளைப் பெற்றதற்குப் பின் புலமாக இருந்திருக்கலாம்.

எல்லாவற்றையும் விட, அவர் துணிச்சலானவர் என்னும் நம்பிக்கை ஒரு சாராரிடம் காணப் பட்டது. இறுதிவரை இரண்டு அணிகளோடும் சேராமல் தனித்து நின்றதும், தான் பிறந்த ஊரில் அல்லது தன் சாதியினர் மிகுதியாக உள்ள ஊரில் போட்டியிடாமல், தனக்குத் தொடர்பே இல்லாத விருத்தாசலத்தில் போட்டியிட்டதும், அவருக்குச் செல்வாக்கைத் தேடித் தந்ததோடு, துணிச்சல்காரர் என்னும் தோற்றத்தையும் அவருக்கு உருவாக்கிவிட்டது.

எவ்வாறோ, 27 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிருக்கும் தே.மு.தி.க, அடுத்த தேர்தலில் ஒரு பெரும் சக்தியாக உருவெடுக்கும் என்ற எண்ணம் தமிழ்நாட்டில் உருவாகியுள்ளது.


இது சரியா, தவறா என்பது ஒரு புறமிருக்க, எதிர்காலத் தமிழ்நாட்டிற்கு இது நல்லதா, கெட்டதா என்னும் வினாவே நமது சிந்தனைக்கு உரியதாக உள்ளது.

தே.மு.தி.க,வின் கொள்கைப் பட்டயம் என்னவென்று வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்லாமல், அக்கட்சியின் நிறுவனருக்கே தெரிந்திருக்குமா என்று தெரியவில்லை. இலஞ்சத்தை ஒழிப்பேன் என்பது போன்ற பொத்தாம் பொதுவான அறிவிப்புகளே வெளியாகி உள்ளன. இலஞ்சத்தோடு சேர்த்து, கறுப்புப் பணத்தையும் ஒழிப்பேன் என்று விஜயகாந்த் சொல்லமுடியுமா என்பது பெரும் கேள்விக்குறி.

எனவே, இலட்சியமோ, கொள்கை நெறிகளோ, அரசியல் அனுபவமோ, கட்சிக் கட்ட மைப்போ இல்லாத தே.மு.தி.க, வளர்ச்சியடைவது நாட்டிற்கு நல்லதன்று.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து மிக விரைந்து செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய், விவசாயக் கடன்கள் அடியோடு ரத்து, வாரம் இரண்டு நாள் ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் முட்டை, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று ஆணைகள் மளமளவென்று தன் தேர்தல் உறுதிமொழிகளை ஆளுங் கட்சி நிறைவேற்றிக் கொண்டுள்ளது. அகற்றப்பட்ட கண்ணகி சிலை விரைவில் அதே இடத்தில் வைக்கப்படும் என்று அறிவிப்பு வந்துள்ளது.

எதிர்க்கட்சிகளே திகைத்துப் போகும் அளவிற்கு, தி.மு.க ஆட்சியின் அறிவிப்புகள் அமைந்துள்ளன. இதே வேகமும், போக்கும் தொடருமானால்,



மக்களிடம் தி.மு.கழகம் பெரும் செல்வாக்கைப் பெற வாய்ப்புள்ளது.

தமிழ் மொழி மேம் பாட்டிற்கான திட்டங்கள் தமிழீழ ஆதரவு, பொருளாதார முன்னேற்றம் ஆகியனவற்றிலும் அரசின் கவனம் தொடருமானால், அடுத்த தேர்தலிலும் தி.மு.க கூட்டணியே அசைக்க முடியாத வெற்றியைப் பெறும் என்றே தோன்றுகிறது.

– இளைய சுப்பு

**• பேச வேண்டிய தருணத்தில் பேசாதிருப்பதும்**

**• பேசாதிருக்க வேண்டிய வேளையில் பேசுவதும் தவறு**

## தமிழகச் சட்டமன்றத் தேர்தல் – 2006 இறுதி முடிவுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி.மு.க – | 96 | அ.தி.மு.க – | 61 | தே.மு.தி.க – | 1 |
| காங்கிரஸ் – | 34 | ம.தி.மு.க – | 6 | சுயேச்சை – | 1 |
| பா.ம.க – | 18 | விடுதலைச் சிறுத்தைகள் – | 2 | | |
| சி.பி.எம் – | 9 | | | | |
| சி.பி.ஐ – | 6 | | | | |
| மொத்தம் – | 163 | மொத்தம் – | 69 | மொத்தம் – | 234 |

# வாழ்த்துகிறார்
# பொன் பாலசுந்தரம் அவர்கள்



பத்திரிகைகள், சஞ்சிகைகளின் வளர்ச்சி புத்தி ஜீவிகளின் வளர்ச்சிப் பாகைமானியாகும். கல்வி அறிவு எங்கு அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் அவை போன்ற இதர பிரசுரங்களும் அதிகளவில் வெளிவருவது உண்டு.

இந்த வகையில் இலண்டன் வாழ் தமிழ் மக்கள் ஒரு விழிப்புணர்வின் மத்தியில் வாழ்கிறார்கள் என்று சொல்லலாம். நாம் பிறந்து வளர்ந்த ஈழத்திலும் பார்க்க இங்கு, அதாவது நாம் வாழும் பிரித்தானியா நாட்டில் எதிர்பார்ப்புக்கும் அதிகமான செய்தி பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், சிறுகதை, கலை, இலக்கியப் புத்தகங்களும் வெளிவந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.

நமது மொழி வலுவிழந்து போகிறது, அழிந்து போகிறது, ஆதரவு இழந்து போகிறது என்று வருத்தப்படும் நெஞ்சங்களுக்கு இப்படியான வெளியீடுகள் பால்வார்ப்பதாக இருக்குமென நான் நினைக்கிறேன். அபிப்பிராயங்கள் அலைகள் போன்றவை. அவற்றைத் தவிர்க்க முடியாததென்பதும் தெரிந்ததே. ஆனாலும் இதில் பொதிந்துள்ள உண்மை நிலை யதார்த்தமானது.

எவ்வளவிற்கு வெளியீடுகள் அதிகரிக்கின்றனவோ, அவ்வளவிற்கு அவை நமது மொழிக்கு ஆதாமாக இருக்குமெனலாம். இன்று இந்தப் பிரசுர எண்ணம் பலர் மத்தியில் மையம் கொண்டிருப்பது ஒரு சுப சகுனமாகும் எனலாம். எவர் கைப்பட்டாலும் நெல்லில் இருந்து அரிசி கிடைத்தால் போதும் என்பார்கள். அந்த வாய்மொழி இதற்குப் பக்கபலமாக இருக்கட்டும்.

இலண்டனில் வெளிவரும் தமிழர் தகவல் வெளிவரத் தொடங்கி மூன்று ஆண்டுகள் நிறைவாகின்றன. சிறு துளியாக மலர்ந்து இன்று பெரு வெள்ளமாகப் பரிமாணம் பெற்றுள்ளது. உலகின் முன்மொழியான அகரத்தை தமிழர்களுக்குத் தந்த தெய்வத் திருவள்ளுவரின் இலச்சினையைத் தாங்கி தமிழர் தகவல் வெளிவருவதே அதன் நோக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. எல்லாம் தமிழ், எதுவும் தமிழ், ஓதுவதும் தமிழ், ஒலிப்பதுவும் தமிழ் என்பதே தமிழர் தகவலின் இலக்காக இருக்கிறது என்பதற்கு அரண் அமைத்துள்ளது.

இதன் பதிப்பாசிரியர் அன்பர் சிவானந்த சோதி அவர்கள் ஒரு சமூகப் பிரியர் – இலக்கியப் பிரியர், இயல் – இசை –நாடகம் அடங்கிய முத்தமிழ்ப் பிரியர். சமயப் பிரியர். பேச்சுப் பிரியர், நாட்டுப் பிரியர் – இப்படி இன்னும் பலவற்றில் பிரியமுடையவர் எனலாம்.

இலண்டன் மாநகரில் எமது பாரம்பரியக் கலைகள் முக்கிய இடத்தைப் பெற வேண்டுமென்ற அபரிமிதமான ஆசை உடையவர் என்பதை பலரும் அறிவார்கள். இலங்கை, ஈழ, தமிழ்நாடு நல்லறிஞர்களை இங்கு அழைத்து வந்து ஆலய மேடைகளிலும், இதர விழா மேடைகளிலும் அறிமுகம் செய்து வைப்பதில் சோதிக்கு நிகர் சோதிதான் என முத்திரை பதித்திருப்பதையும் நாம் அறிவோம்.

இப்படியான செயல்களைச் சாதிப்பதற்கு வல்லமை வேண்டும். பேச்சுத் திறன் வேண்டும், ஆற்றல் வேண்டும். இதற்கெல்லாம் முகம் கொடுக்கும் திறனை ஒன்றாகப் பெற்றவர் அன்பர் சோதி (சிவானந்த சோதி என்னும் முழுமையான பெயரிலும் பார்க்க சோதி என்னும் பெயரில்தான் இவர் பிரகாசம் பெற்றுள்ளார்.)

இப்படிப்பட்ட ஆற்றல் மிக்கவரான அன்பர் சோதி தமிழர் தகவல் இலண்டனுக்கு பதிப்பாசிரியராக இருப்பது வெளியீட்டின் வளர்ச்சிக்கு உரமாக உள்ளது. ஆசிரியர் அரவிந்தன் அவர்களது எழுத்தாற்றலும், சோதி அவர்களின் செயலாற்றலும் இதன் வளர்ச்சிக்கு மேலும் தளமாக அமைந்துள்ளது.

அச்சுப் பதிப்பில் சோதி அவர்களின் அணுகுமுறை ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சஞ்சிகையின் தமிழ்ப் பணி தொடர எமது வாழ்த்துக்கள்.

பொன் பாலசுந்தரம்

# குறுகத் தரித்த குறள்

**– சுப. வீரபாண்டியன்**

வாழ்வில் அனைத்தும் அளவு சார்ந்தது. நாம் உண்ணும் பொருள் உணவா, மருந்தா, நஞ்சா என்பதைக் கூட அதன் அளவுதான் தீர்மானிக்கிறது.

அளவோடு உண்டு, அளவோடு செயல்பட்டு, அளவோடு உறங்கி, அளவறிந்து வாழும் வாழ்க்கையே மேன்மையானதும், இனிமையானதும் ஆகும்.

மன ஊக்கத்திற்கும் கூட அளவும், எல்லையும் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர். ஊக்கமுடைமைதான் நம்முடைய பெரிய உடைமை, சொத்து என்று கூறும் திருவள்ளுவர்தான், அதுவும் அளவு சார்ந்தது என்பதை விளக்குகிறார்.

போர்க்களம் புகும் மன்னவன்கூட செல்லும் அளவு சென்றபின், அத்துடன் நில்லாமல் மன எழுச்சியின் காரணமாக மேலும் செல்வானாகில், அவ்வெழுச்சியே அவன் இறுதி முடிவுக்குக் காரணமாகி விடும் என்று அவர் எச்சரிக்கிறார்.

தன் எல்லையைக் கடந்து செல்லும் ஊக்கம் '' நுனிக் கொம்பு '' ஏறுதல் போன்றது என்கிறார். அது மிக அழகிய உவமையாக உள்ளது.

'' நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்

உயிர்க்கிறுதி ஆகி விடும் '' (குறள் – 476)

என்னும் குறள் உலக வரலாற்றின் சில நிகழ்வுகளை நமக்கு நினைவுபடுத்துகின்றது.

அலெக்சாண்டர் தொடர்ந்து பல நாடுகளின் மீது போர்தொடுத்து வென்றார். அவருடைய ஊக்கமே, அவருக்கு வெற்றி மேல் வெற்றியைத் தந்து கொண்டிருந்தது. ஆள முடியாத அளவுக்கு அவரின் ஆட்சி எல்லை விரிந்தது. ஆனாலும் அவருடைய மன எழுச்சி குன்றவில்லை. அதன் விளைவாக '' நுனிக்கொம்பு '' ஏறிடும் விதமாகத் தொடர்ந்து களங்களில் அவர் போர் புரிந்தார். 33 ஆண்டுகள் மட்டுமே உலகில் வாழ்ந்த அலெச்சாண்டர், 17 ஆண்டுகளைப் போர்களத்திலேயே தொலைத்தார். இறுதியில், தன் நாட்டுக்கு அவர் திரும்பவே இல்லை. களம் பல கண்ட அந்த மாவீரன் காய்ச்சலில் இறந்து போனார்.

நெப்போலியனும், இட்லரும் கூட இப்படி நுனிக்கொம்பு ஏறியவர்கள்தாம். அதனாலேயே அவர்களின் உயிர்க்கிறுதி ஆகி விட்டது.

அளவையும், எல்லையையும் எல்லா இடங்களிலும் வள்ளுவர் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்.

மிகக் கனமான இரும்பு வண்டியில், மிக மென்மையான மயில் தோகையை ஏற்றும்போதும், அளவு பற்றிய கவனம் வேண்டும் என்பது அவருடைய பார்வை. இத்தனை பெரிய இரும்பு வண்டியை, இத்தனை சிறிய மயில்தோகையால் என்ன செய்ய முடியும் என்று எண்ணி விடாதீர்கள். அளவு கூடினால் அச்சாணி முறிந்துவிடும் என்பது அவர் வாக்கு. அளவு குறித்து அவர் எவ்வளவு எச்சரிக்கை செய்கிறார் என்பதை இங்கு நம்மால்உணர முடிகிறது.

அப்படியானால், அளவு கடந்த, எல்லையற்ற ஒன்று என எதுவுமே உலகில் இல்லையா என்று கேட்டால், வள்ளுவரிடமிருந்து புன்னகையோடு ஒரு விடை வருகிறது. ஒன்றே ஒன்று உள்ளது என்கிறார். அது என்ன என்று ஆர்வமுடன் நாம் நோக்க,

'' அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ''

என்கிறது குறள்

உலகில் அன்பு ஒன்றே எல்லையற்றது.

# மஞ்சள் மகிமை



உணவே மருந்து ; உணவு என்றிருப்பது, நமது உணவு முறை, முன்னோர் நமக்கு வகுத்துக் கொடுத்துள்ள முறையறிந்து, வகையறிந்து, அளவறிந்து உண்ணும் பொருளறிந்து உண்டு வருவோமானால் நம்மிடம் நோய்க்கு இடம் கிடைக்காது.

தயிரின் சிறப்பை அண்மையில் ரஷ்ய விஞ்ஞானி கண்டு வியந்து வெளிப்படுத்தினார். அதேபோல இன்று மஞ்சளின் மருத்துவச் சிறப்பை மேனாட்டு விஞ்ஞான ஆய்வு பாராட்டியுள்ளது.

மஞ்சள் சிறந்து ஆன்டி பயாடிக் எனப்படுகிறது. சிறந்த கிருமி நாசினி என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மஞ்சள் பொடி சேர்த்து உண்போருக்குப் புற்று நோய் வரும் வாய்ப்புக் குறைவு என்று கூறப்படுகிறது. பாக்டீரியாக்களைப் போல, வைரஸ் எனப்படும் நுண்கிருமிகள் மருந்துகளுக்கு அவ்வளவு எளிதில் கட்டுப்படுவதில்லை. ஆனால் மஞ்சள் அவற்றைக் கண்டிக்கிறது.

இதனாலேயே, அம்மை நோய்ப்புண் மேல் வேப்பிலையை அரைத்து மஞ்சளுடன் கலந்து பூசுகிறார்கள்.

உடம்பு நாற்றத்தை நீக்கவல்லதாகையினாலேயே, நமது பெண்கள் மஞ்சளை அரைத்துப் பூசிக் குளிக்கும் வழக்கம் உள்ளது. அமில குணம் உள்ளதாகையால் தோல் வியாதியும் வராமல் காக்கிறது.

புண்களின் மேல் பொடியாகத் தூவினாலோ, அரைத்துப் போட்டாலோ புண் எளிதில் ஆறும். கட்டிகள் உடையும்.

மஞ்சள் நீர்க் காமாலையைக் குணப்படுத்தும். மஞ்சள் சூரணம் வயிற்றுக் கோளாறுகளை நீக்கி, குடலையும் வலுப்படுத்தும். நல்ல பசியைத் தூண்டும். சர்க்கரை வியாதிக்கும் நல்லது இது என்பர். இதனாலேயே மஞ்சள் பொடி சேர்த்தே சமைப்பது நம் வழக்கம்.

வாதம், பித்தம், சிலேத்துமம் எனப்படும் மூன்று குற்றங்களையும் போக்கும். தலைவலி, நீர்க்குற்றம், சைனஸ் கோளாறு, காய்ச்சலற்ற வலிகள், ரணம், பூச்சிக்கடிகள், வீக்கம் எல்லாவற்றிற்கும் மஞ்சள் மருந்தாகிறது.

1. இது பிள்ளைப்பேற்றில் கஷாயமாகக் கொடுக்கப்படும். மணிக்குடல் கட்டு முதலிய நோய்களுக்கு நல்லது.

2. இது சுவாசம் பற்றிய நோய், கணமூலம், கணச்சுரம் முதலியவற்றைப் போக்க வல்லது. பசியைத் தருதல் வெப்பம் அகற்றுதல். உடலை உறுதி செய்தல் இதன் காரியங்களாகும். சிராய்ப்புகளால் தோல் சிதைந்தால் அதை அரைத்துப் பூசுவர். தலைக்குப் பற்றுப் போட்டால் அதிக உஷ்ணம் நீங்கும். இரத்தக்கட்டும் மாறும். மூல நோய்க்கு நல்லது என்பர்.




# மிளகு – விலகும் நோய்கள்

அன்றாடம் சமையலில் மிளகு சேருகிறது. இது சூடு தருவது. சீதள நோய்களும், காய்ச்சலும் அகலும். கோழை அழியும். கொடியாக மரங்களில் படரும் தாவரம் இது. உண்மையில் காய்போல இறுகி உள்ள இது கனியாகும். ஆனால் காரமான கனி. கசப்பும் இதில் அடக்கம். கொடியும் விதையும் பயன்படுவன.

வீக்கங்கரைக்கும். வெப்பம் கொடுக்கும். வாதம் குறைக்கும். கீழ் மூலநோய் நீக்கும். அகட்டு வாய்வை விலக்கும்.

நல்ல மிளகு என்பது நல்ல மருந்து. அதனாலேயே நம்மவர் ரசத்திலும், கூட்டிலும் இதைச் சேர்த்துண்ணச் செய்துள்ளனர். வெள்ளை மேகத்திற்கு மிளகை அரைத்துச் தேனுடன் குழைத்துண்ண வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக நோய்க்கு அரைத்துப் பூச வேண்டும். நெய் சேர்த்துப் பூச வேண்டும். பேதியும் வாந்தியும் உண்டானால். மிளகு, பெருங்காயம், கசகசா ஆகியவற்றை இடித்து மாத்திரைகளாகச் செய்து ஒரு மணி நேரத்திற்குச் சின்ன மாத்திரை ஒன்று வீதம் சாப்பிடலாம். சுகமாகும். 15 வயதுக்கு உட்பட்டவர் பாதி மாத்திரை உண்ண வேண்டும். குளிர் காய்ச்சலுக்கு கழச்சிக் கொட்டை (பருப்பு)யுடன் ஒன்றுக்குப் பாதியாகச் சேர்த்தரைத்துச் சாதாரண காலத்தில் சாப்பிட்டால் நல்லது. சாதாரணமாக மிளகும் சீரகமும் சேர்த்துப் பொடி செய்து உப்புப் போட்டு சாதத்தில் நெய்விட்டுப் பிசைந்து சாப்பிட வாதம்,கபம் குணமாகும்.

# மிஞ்சியே உண்டால் இஞ்சியே கதி



இஞ்சி பொதுவாக ஜீரணத்திற்கு உதவும். சமையலில் சேர்க்கப்படும் பண்டம். காரம் மிக்கது. உடலில் உஷ்ணத்தைத் தர வல்லது. இதனால் குளிர்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் உப்பை போல மிகக் குறைந்த அளவிலேயே சேர்க்கப்படும்.

காரம், புளிப்பு இல்லாத பொங்கல் போன்ற ஐட்டத்தில் இஞ்சி போடுவது சீரணம் எளிதில் ஆகத்தான். காலையில் இஞ்சியை நசுக்கிச் சாறெடுத்து எலுமிச்சம்பழம் பிழிந்த தண்ணீர் விட்டு அருந்தினால் வயிற்று வாயு கலையும். சீரண சக்தி பெருகும். வாதம் குறையும்.

திமிர் வாதம், சத்து வாதம் கோளாறுகளுக்குச் சாராயம் விட்டு அரைத்து மேலே பூசுவர். காச வாதத்தையும் இது அடக்கும். பேதி, உடல் மெலிவு, நாடியை சுறுசுறுப்பாக்கும். இருமல் காய்ச்சலில் உண்டாகும் ஜன்னி, நீர்க்கடுப்பு மேக நோய்கள் குணமாக இஞ்சி நல்லது. காச நோய் கூட முதல் நிலையில் இஞ்சியால் குணமாகும். பசியை உண்டாக்கி சளியைப் போக்கும்.



அட்டையில்

தமிழீழத்தில் அண்மையில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலுக்கு லண்டன் வாழ் தமிழ் மக்களின் கண்டனத்தினை பிரித்தானிய அரசுக்குத் தெரிவிக்கு முகமாக 21-5-2006 பிற்பகல் 2மணிமுதல் 6மணிவரை நடைபெற்ற அமைதி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கூட்டம். தொடந்த மழையிலும் பல நூற்றுக்கணக்காண மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டது பாராட்டுக்குரியது.

## புதினம் பத்திரிகை – பத்தாவது ஆண்டு விழா

புதினம் பத்திரிகையின் பத்தாவது ஆண்டு விழா மே மாதம் 20ம் திகதி (20-05-2006) குறைடன் லாங் பிறாங் பாடசாலையில் மிகக்கோலாகலமக நடைபெற்றது. மண்டபம் நிறைந்த சனத்திரளுடன் லண்டனின் முக்கியமான தமிழ்ப் பிரமுகர்கள் கலந்துகொண்ட விழாவில் திருமதி ராகினி ராஜகோபாலின் 70 மாணவிகளின் பல்வேறு நடன நிகழ்ச்சிகள் பார்வையாளருக்கு விருந்தாக அமைந்தன. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான புலவர் அமுதுவின் இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள்' புதினம் பத்திரிகை நடாத்திய உலகளாவிய சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்ற கதைகளின் தொகுப்பு, பத்தாண்டு நிறைவுச் சிறப்பிதழ் என்ற நூல்களின் வெளியீட்டு விழா திரு ஏ தார்சீசியஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மிகத் தாமதமாக இடம்பெற்ற இந்த நிகழ்ச்சி எட்டரை மணியளவில் இடம்பெற்றிருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும். புல்வேறு தமிழ்ப் பிரமுகர்களின் வாழ்த்துரைகள் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றன.புதினத்தின் பத்தாண்டு வெளியீட்டுக்கு தொடந்து பங்களித்த திரு சிவா பிள்ளை, பிரம்மஸ்ரீ லோகேஸ்வரக் குருக்கள் உட்பட பலர் கௌரவிக்கப் பட்டனர். நிகழ்ச்சிகள் மிக நீண்ட காரணத்தினால் இறுதி நிகழ்ச்சியான துசி-தனு சகோதரிகளின் இன்னிசை நிகழ்ச்சியையும் சுருக்க ஏற்பட்டது ஒரு குறையே. ஐபிசி அறிவிப்பாளர் எஸ் கே ராஜன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். மண்டபம் நிறைந்த சனக்கூட்டத்துடன தமிழ்ப் பத்திரிகையின் விழா ஒன்று நடைபெற்றதைப் பாராட்ட வேண்டும்.

சி. நாகலிங்கம்



## தூயன தூவும் தகவல்

சீமை இதில் மாதாந்தம் தாவும்
செந்தமிழில் தகவல்களை ஓதும்
தோகையிலோ எழில் அழகு வர்ணம்
தொடராக ஆக்கங்கள் மின்னும்

மூன்றாண்டை நிறைவு செய்யும் ஏடு
முப்பத்தாறு இதழ் விரிந்து நீடு
தாம் ஆண்ட தமிழர்சொந்த ஈழம்
தமிழர்பெறும் தாகம் இதன் நாதம்

நன்னெறிகள் புனிதவழி சொல்லும்
நயக்க நல்ல கதை துணுக்கு உள்ளம்
தன் உணர்வை சிவானந்த சோதி
தருகின்றார் வருவாயை மீறி

இலவசமாய் கரம் எட்டும் ஈதை
என்றென்றும் வெளிவரநற் பாதை
விளம்பரத்தால் செய்யத்தமிழ் தாயாள்
வியாபாரம் தழைக்க செய்வாய் சீராய்

ஒளிஒலிகள் கோயில் பள்ளி ஆய
ஊடகங்கள் இதுபோலத் தூய
நலிவகற்றும் தூய தமிழ் சேவை
நல்கின் தமிழ் அரசு இந்தச் சீமை

**ப.வை. ஜெயபாலன்**

**-லண்டன்-**

**இயற்கை சொல்லிக் கொடுக்கும், வாழ்க்கை கற்றுக் கொடுக்கும்**

## அரசமைப்புக் கவுன்சிலும் தமிழர்களும்:

இலங்கையின் அரசு அரசமைப்புக் கவுன்சிலுக்கு இறுதியான ஒரு பிரதிநிதியை நியமிக்கும் உரிமை குறித்து ஜே.வி.பி.யும் தமிழர் தேசியக் கூட்டமைப்பும் இதுவரை இழுபறிபட்டுவந்தன. அரசியலமைப்பின் 17வது சரத்தின்படி அரசியலமைப்புக் கவுன்சிலுக்குப் பின்வருவோர் உறுப்பினர்களாக இருப்பர். பிரதமர், சபாநாயகர், நடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரினதும் சிபார்சுகளின்பேரில் ஜனாதிபதி நியமிக்கும் ஐவர். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் சார்பு இல்லாத தனிக்கட்சியினால் சிபார்சு செய்யப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர் இந்தப் பத்துப்பேர் கவுன்சிலுக்கு சபாநாயகர் தலைவராக இருப்பார். ஆனால் இந்தக் கவுன்சிலின் பத்தாவது உறுப்பினரை நியமிப்பதில் ஏற்பட்ட இழுபறி காரணமாக அரசமைப்புக் கவுன்சில் இன்னும் செயற்படவில்லை. இதனால் அரச உயர் நியமனங்கள், சுயாதீனப் பொதுச்சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை வரையறை ஆணைக்குழு என்பன செயற்படாமல் முடங்கிப் போயுள்ளன. இப்போது சபாநாயகருக்கு கொடுக்கப்பட்டுள்ள சட்ட ஆணையின்படி தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கே அது வழங்கப்படவேண்டுமென இலங்கைச் சட்டமா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

(செய்தி: சுடர்ஒளி, இலங்கை)

## ஆயுதங்களைக் கீழே போடுமாறு கேட்க எவருக்கும் உரிமையில்லை:

எங்களது ஆயுதங்களைக் கையளிக்கச் சொல்லவோ அல்லது கீழே போடச் சொல்லவோ எந்த ஒரு நாட்டுக்கும் உரிமை கிடையாது. ஒரு விடுதலைப் போராட்டம் உச்சத்தை நோக்கிச் செல்லும்போது சர்வதேச சமூகம் மற்றும் பிராந்திய வல்லரசுகள் அந்த விடுதலைப் போராட்டங்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்கும். விடுதலைப் போராட்டங்கள் மீதும் அதை நடத்தும் தலைமைகளின் மீதும் இப்படியான அழுத்தங்களை காலத்துக்குக் காலம் செலுத்துவது வழமையானது. தோல்வி அடைந்த நாடுகளை நாங்கள் கவனிக்காமல் விட்டுவிட்டால் அது எங்களைத் திருப்பிக்கடிக்கும் என்று கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்க அமைச்சர் கொண்டலிசா ரைஸ் தெரிவித்து இருந்தார். கொபி அனானும் சொல்லியிருந்தார்.

நாங்கள் ஏந்தியிருக்கும் ஆயுதங்கள் எங்கள் மக்களால் எங்களுக்குஅளிக்கப் பட்டவை. தமிழ்மக்களின் பாதுகாப்பு, சுதந்திரம், விடுதலை இலட்சியத்தை உறுதி படுத்தியதன் பின்பு எங்கள் ஆயுதங்களை தமிழ் மக்களின் அரச கட்டமைப்புகளான தேசிய இராணுவம் மற்றும் கடற்படை ஆகியவற்றிற்கு மாற்ற முடியும். அதுவரை தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணான ஆயுதங்களைப் புலிகள்தான் வைத்திருப்பார்கள்.

(புலித்தேவன் - சமாதானச் செயலாளர்)

## சமாதனத்தைச் சிதைத்த ஊடகங்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகள் யாவும் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளாகவே இருந்தன. 1983ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஊடகங்களின் இத்தகைய போக்கு மிகத் தெளிவாகப் புலனாகியது. விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவந்த கொலைகள் தொடர்பில் சாதாரண தமிழ் மக்களுக்கு தொல்லைகள் ஏற்படுத்த பெரும்பான்மை இனத்தவருக்குத் தூண்டுதல் அளிக்கும் விதத்தில் பத்திரிகை ஊடகம் பிரசாரம் மேற்கொண்டு வந்தது.

பத்திரிகை ஊடகத்தின் நடுநிலையற்ற அத்தகைய போக்கு இனரீதியில் ஒரு சாரார் அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்வதற்க்கும் மற்றொரு சாரார் அத்தகைய படுகொலைகளை மேற்கொள்வோருக்கு உதவுவதற்கும் காரணமாக அமைந்தது. அவ்விதப் படுகொலைகளுக்கு உதவி புரிந்தோரில் கணிசமான அளவு அரசியல்வாதிகளும் உள்ளடங்கி இருந்தனர். படுகொலைகள் இடம்பெறும்வரை அவற்றைத் தடுக்கவோ தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ பொலிஸாரோ பாதுகாப்புப் படையினரோ விரைந்து செயற்படவில்லை.

(எஜ்.ஜீ.புஞ்சிகேவா. 'இருதின' சிங்களப் பத்திரிகையில்)

## மீண்டும் கண்ணகி?

யூன் மூன்றாம் திகதி கடற்கரை சாலையில் மீண்டும் கண்ணகி சிலை நிறுவப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமான கண்ணகி சிலை மீண்டும் அதே இடத்தில் கடற்கரைச் சாலையில் வரும் யூன் மூன்றாந் திகதி மாலையில் நிறுவுவதற்கு பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. குமரி முனையில் உள்ள திருவள்ளுவர் சிலையை அருகில் சென்று காண்பதற்கான படகுப் போக்குவரத்தும் பலப்படுத்தப்படும்.

(தமிழ்நாடு அரசு செய்தி)

## மொன்டினீக்ரோ - புதிய மலர்வு!

உலகின் புதிய சுதந்திர நாடு. 650.000 மக்களைக் கொண்டுள்ள மொன்டினீக்ரோ சேர்பியாவிலிருந்து சர்வசன வாக்கெடுப்பின் பிரிந்துள்ளது. இத்துடன் யூ கோஸ்லாவியாவின் இறுதி அத்தியாயமும் முடிவுக்கு வந்துள்ளது. இந்நாடு செப்டம்பரில் ஐ.நா.உடன் இணையும் என அறிவிக்கப்படுகிறது.

(இணையச் செய்தி)

## தடைகள் தடுக்காது!

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளோ எம் சொத்துக்களை முடக்குவதிலோ நாம் எந்த விதத்திலும் பாதிக்கப்படப் போவதில்லை. ஏனென்றால் நாங்கள் எந்தச் சொத்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

(சு.ப.தமிழ்ச்செல்வன். எ.எப்.பி பேட்டி)

## பயணமும் பாதுகாப்பும்!

இலங்கை அகதிகளை ஏற்றுக் கொள்வதென்று இந்திய அரசு முடிவு எடுத்த அதே நேரத்தில் கடலில் அகதிகளை ஏற்றிவரும் படகுகளுககுத் தேவையான பாதுகாப்பு கொடுப்பதற்கும் கண் காணிப்பதற்கும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். படகுகளை வழியில் நிறுத்திச் சோதனை செய்து அவர்களை முறையாக ஒரே இடத்தில் கரை இறக்க நடவடிக்கை எடுத்தாலே நடந்தது போன்ற உயிர்ப்பலிகளைத் தவிர்க்கலாம். இதன் மூலம் புலிகள் இயக்கத்தினரின் ஊடுருவலையும் தடுக்கலாம்.

(தமிழகத்துத் தினமலர் நாளிதழ்)

*இலண்டன்*
*13.05.2006*

*அன்புள்ள ஆசிரியர்*
*தமிழர் தகவல்*

*தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாகவே – தேர்தல் முடிவுகள் வெளிவருமுன்பே கலைஞர் கருணாநிதியின் கூட்டணி வெற்றியை முன்கூட்டியே உணர்ந்துள்ளீர்கள்.*


*அதன் நிமித்தம் தமிழர் தகவல் அட்டையில் கலைஞரின் படத்தைப் பிரசுரித்துள்ளீர்கள். உங்களுக்கு எனது நன்றிகள்.*

*மு. நேமிநாதன்*
*இலண்டன்*

*அன்புள்ள ஆசிரியர்*

*கலைஞரின் படத்தை அட்டையில் போட்டு அசத்தி விட்டீர்களே. தமிழர் தகவலுக்கு எனது வாழ்த்துக்கள்.*

*ஜெகதீஸ்வரன்*
*இலண்டன்.*




---

# லோகம்

லோகம் என்ன லோகமடா...
பூவலோகமா... தேவலோகமா...
கோலம் வாழ்க்கை என்னும் கோலம்
எதை தேடி போகும் மானிடனின் வேகம்

ஆதாம் ஏவாளில் தொடர்ந்த உலகம்
இரு பாலாய் பிரிந்த பாகம்
உயிரை சுமக்க பெண்ணுக்கு தேகம்
அணுவை கொடுத்த ஆணுக்கு மீதம்

ஐந்து பொறிகளை உணரும் பாடம்
செயற்கையை நாடும் மனதாபம்
ஆசை கடலில மூழ்கும் உள்ளம்
அதுவே அவனை வீழ்த்தும் நேரம்

**K. Sri . Thangesvari**




## திருமண சேவை

'சிறந்த சேவை குறைந்த கூலி' இதுவே, வேல்அமுதனின் இலட்சியம்.

' வேல் அமுதனின் குறிக்கோள் ' பற்றி மேலதிக விவரங்கள் அறிய தசாப்த விழாக கண்ட 'சுயதெரிவுமுறை முன்னோடி', புகழ்பூத்த மூத்த திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல்அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி நாட்களில் இலங்கை நேரம் மாலை மணி 4.30 முதல் இரவு 8.30 வரையான நேரகாலத்துள் தொடர்பு கொள்க!

வேல் அமுதனின் கொழும்புத் தொலைபேசி:
**+94112360488, +9114514396, +0602158067**

வேல் அமுதனை நேரில் அல்லது தங்கள் இலங்கை பிரதிநிதி சந்தித்தல் முக்கியம்!

முகவரி:

**Self Selection System, Reputed Marriage Faciliator, Kurumpasidiyoor Mayelu Vel Amuthan**
**( 11th Year in Matrimony )**
**8 / 3 / 3 Metro Apartment**
**( Opposite Wellawatta Police, Via 33rd Lane )**
**55th Lane, Colombo-06, Srilanka.**

## உங்கள் சாதகத்தை துல்லியமாக அறிந்து கொள்ளுங்கள் வித்யாதரன் அவர்களிடம்



லண்டனில் இப்பொழுது எந்த மளிகைக்கடைகளுக்கு போனாலும் சோதிடம் பார்க்கப்படும் என்ற ஒரு அறிவிப்பு பலகை காணப்படுகிறது. அந்தக் கடைக்குள் சில படங்களை வைத்து கற்பூரங்காட்டி வரும் போலி சோதிடர்கள் விலாசம் தெரியாதவர்கள். தமிழ் நன்றாக தெரியாத தெலுங்கு மொழி பேசும் சோதிடர்கள் கும்பலாக வருகை தந்து ஒன்றும் அறியாத ஈழத்து மக்களிடம் பணத்தை சூறையாடுவது அன்றாட நிகழ்ச்சியாக இருப்பதை தமிழர் தகவல் அறிகிறது.

ஆகவே தமிழர் தகவல் இலண்டன் மக்களுக்கு சிறந்த முறையில் சோதிடம் சொல்லக்கூடிய, சிறந்த படிப்புடைய, பிரபல்யமான சில சோதிடர்களை அறிமுகம் செய்ய விரும்புகிறது. அந்த வகையில் சென்ற வருடம் அறிவொளி அவர்களை தீபம் மூலமாகவும், தமிழர் தகவல் மூலமாகவும் அறிமுகம் செய்து வைத்தோம். பலர் அதன் மூலமாக பயனடைந்துள்ளார்கள். அதே வழியில் இந்த வருடம் சோதிட விற்பன்னரும், தீபம் தொலைக்காட்சியில் சோதிடம் சொல்பவருமான வித்யாதரன் அவர்கள் தமிழர் தகவலின் அழைப்பை ஏற்று லண்டன் வருவதற்கு இசைந்துள்ளார். இவர் ஆடி மாத முற்பகுதியில் வரலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இவர் துல்லியமாக சோதிடம் கணிப்பதில் வல்லவர். ஆனந்த விகடன், சக்தி விகடன், வார இதழிலும். தினகரன் பத்திரைகையிலும் சோதிடம் கணித்து எழுதுகிறார். இவரை தொடர்பு கொள்ள விரும்புகிறவர்கள் தமிழர் தகவலுடன் தொடர்பு கொள்ளவும்.

---

## பண்ணிசைக் கச்சேரி



ஓதுவார்கள்
திரு சண்முக சுந்தர தேசிகர்
திரு வெங்கடேசன்

**இவர்களின் பண்ணிசைக் கச்சேரி**

லண்டன் சிவன் கோவில், முத்துமாரியம்மன் கோவில்,**Archway Murugan Koil** மண்டபங்களில் பண்ணிசைக் கச்சேரி நடைபெற உள்ளது. இலண்டனில் இதற்கு முன்பும் பின்பும் இப்படியொரு கச்சேரி நடந்திருக்க, நடக்க வாய்ப்பில்லை. உங்கள் இருக்கைகளை உறுதி செய்து கொள்ளுங்கள்.

தொடர்பு : தமிழர் தகவல்

## தமிழர் தகவலில் ஏன் விளம்பரம்

அண்மையில் நான் – தமிழ்நாட்டுக்குச் சென்ற இடத்தில் தொடராக நான்கு மாதங்கள் தங்கி விட்டேன். மீண்டும் நான் இலண்டனுக்கு வந்தபோது பல மாற்றங்களைக் காண முடிந்தது. நான்கு மாதங்களில் நிகழ்வுகள் பெரும் மாற்றங்கள்.

மாதா மாதம் வெளிவரும் தமிழர் தகவலின் விளம்பரம் இந்த மாற்றங்களை உடனுக்குடன் மக்களுக்கு தெரிவிப்பதாக இருக்கும். ஆகவே மாதந்தோறும் விளம்பரம் செய்யுங்கள்.

– பதிப்பாசிரியர்.



# தமிழர் வாழ்வில் கூத்துக்கலை

ரா. சாருமதி MA ( நாட்டியம்)

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி இக்கூற்றினை ஆராயுமிடத்து மண்தோன்றா காலத்திற்கும் முன்னரே தமிழ்க்குடி தோன்றி மூத்து முதிர்ச்சி நிலையினையும் அடைந்திருந்தது. தமிழரின் வளர்ச்சி நிலைகளைப் பொறுத்த வரையில் வளர்ச்சியின் தொடக்கமே முதிர்ச்சி என்பதே பல துறைகளிலும் காணப்படுகிறது. கதை, கட்டுரை, கவிதை, என்ற இலக்கிய கூற்றில், கவிதை எழுதுவதே தேர்ச்சி பெற்ற நிலை. ஆனால் தமிழிலக்கியத் தோற்றமே செய்யுள் பாடுவதிலிருந்துதான் தொடங்கியுள்ளது. இவ்வாறு அனைத்து துறைகளிலும் கரைகண்ட தமிழர், கூத்துக் கலையிலும் ஆரம்ப காலத்திலே பெரும் வளர்ச்சியை கண்டனர்.

தொகையும் பாட்டுமான பழந்தமிழிலக்கியங்கள் பழந்தமிழர் வாழ்வின் செழுமையைப் படம் போட்டுக் காட்டுகின்றன. சோறுவாக்கிய கொழுகஞ்சி ஆறுபோல் பரந்தொழுகும் அளவிற்கு வாழ்க்கை வளம் மிகுந்து அமைந்திருந்தது. மக்கள் மகிழ்ச்சியாக வாழும்போதுதான் கலைகள் பெருகி வளரும். கூத்தும், இசையுமான இரு கலைகளில் கூத்துக்கலையே மக்களால் பெரிதும் விரும்பப் பட்டது என்று துணிந்து கூறலாம். இசை எல்லோராலும் எளிதில் கையாளத்தக்க கலையன்று. ஏனெனில் கடுமையான இலக்கணம் கொண்டது. அவ்வாறன்றி கூத்துக்கலை யாவராலும் கையாளத் தக்க பாமரக் கலையாகத் திகழ்ந்துள்ளது.

கூத்துக்கலை மக்களது வாழ்வில் பெரும்பங்கு கொண்டிருந்தது. உண்பது உறங்குவது போல் கூத்துக்கலை தமிழர் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. இக்கூத்துக்கலை தமிழர் புறவாழ்வில் மட்டுமின்றி, அகவாழ்விலும், பொழுதுபோக்கு, தொழில் முறையிலும், வழிபாட்டிலும் முக்கிய பங்கு வகித்தது.

### வழிபாட்டில் கூத்துக்கள்:

பழந்தமிழர் வழிபாடு கூத்து வழி நடந்தது. வெறியாட்டு நிகழ்ச்சி கூத்து வழி நிகழ்த்தப்பட்ட ஒருவழிபாடே ஆகும். தமிழர் வழிபாட்டின் முன்னோடியே வெறியாட்டுப் போன்ற கூத்தாட்டு நிகழ்ச்சியே குரவை போன்ற கூத்துக்களும் தெய்வ வழிபாட்டில் இடம் பெற்றன. சீர்மிகு நெடுவேள் பேனித்தமூஉப்பிணையூஉ - (மதுரைகாஞ்சி 613 – 614)

கூத்து வழிபாடே பழந்தமிழரின் மூல வழிபாட்டு முறை. முருகக்கடவுளை நினைத்து வெறியாடல் காந்தள் போன்ற கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டன. கொற்றவையை வணங்கி சாலினியாடலும் நிகழ்ந்தது. குறிஞ்சி நில மக்கள் தங்களுக்குத் துன்பம் நேர்ந்த பொழுதெல்லாம், குறிஞ்சிக் கடவுளை நினைத்துக் குரவை ஆடியே தொழுதனர். நெய்தல் நில மக்கள் சுறாவின்கோடு நட்டு அதையே தெய்வமாக எண்ணி ஆடி வழிபட்டனர். முருகள் குன்றுகளில் நின்று ஆடிய ஆட்டமே குரவை. இது இறைவனாலே ஆடப்பட்டது.

வெண்கூதாளத்துத் தண் பூங்கோதையர்
வினைச்சுறாவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்வணங்கினான்
மடற்றாழைமலர் மலைந்தும்
பிணர்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலையிரும் பரதவர் ( பட்டினப்பாலை 85 – 90)

### பொழுதுபோக்கில் கூத்துக்கள்:

கூத்துக்கலை பழங்கால தமிழருக்கு சிறந்த பொழுது போக்குச் சாதனமாக விருந்தளித்தது. இரவு வேளையிலும் கூட விளக் கொளியில் கூத்துக்கள் நிகழ்ந்தன. கூடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து முழா இமிழ்துணங்கை (பதிற்றுபத்து 52 13 – 14) மக்களும் இராக்காலம் முழுதும் விழித்திருந்து கூத்து நிகழ்ச்சிகளை ஆர்வமுடன் கண்டுகளித்தனர். பாடலார்த்துமங நாடக நயந்தும் வெண்ணிலாவின் பயனறுத்தும், கண்ணடை இயகடைக்கங்குலான் ( பட்டினப்பாலை 113 – 115 )



இயற்கையில் விளங்கிய மயிலின் ஆடலும் மானின் துள்ளலுமே மனிதனை முதல் முதலில் ஆடற்கலையினைப் படைத்திடத் தூண்டியிருக்க வேண்டும். இது போன்ற இயற்கையில் அமைந்த மயிலினாட்டமும், மானின் துள்ளலுமே மனிதரின் பொழுது போக்காக இருந்திருக்க வேண்டும். இக்கூத்துக்கள் மனிதன் நினைத்த போதெல்லாம் பார்வைக்கு நிகழ்வதில்லை. ஆதலின் நினைத்த வாய்ப்பாக இயற்கையிலிருந்து மனிதன் தாமும் கூத்துக்கலையினைக் கற்றிருக்க வேண்டும். மயிலினாட்டமும், மானின் துள்ளலும் மர நிழல்களிலும் குன்றின் உச்சிகளிலும் நிகழ்ந்தது போலவே பழந்தமிழரின் முதல் நிலைக்கூத்துக்களும் மர நிழலிலும் குன்றின் உச்சியிலுமே நிகழ்ந்தன.

வேங்கை முன்றில் குரவை – புறநானூறு *129:3*

குன்றுதோறும் நின்ற குனுரவை – மதுரைகாஞ்சி : *165*

பொழுது போக்காய் அமைந்த கூத்துக்களை மன மகிழ்ச்சியுடன் ஆடினர் மக்கள். அவ்வேளைகளில் அவர்கள் பெரும்பாலும் கள்ளுண்டிருந்தனர்.

நனைக்கள்ளின் மனைக்கோசர் : தீம்தேறல் நறவு மகிழ்ந்து தீம் குரவை கொளை தாங்குது – புறநானூறு *396 : 7–9*

குரவை கூத்திற்கு பறை என்னும் இசைக்கருவி பயன்பட்டது. பொழுது போக்குக் கூத்துக்கள் மக்களது தினப்பணிகள் முடிந்த பின்னரே நிகழ்த்தப்பட்டன. முல்லை நில மக்கள் தங்களது எருதுகளைத் தொழுவில் சேர்த்தபின்பு கூத்துக்களை நிகழ்த்துகின்றனர். ஏறு கொண்டு ஒருங்கு தொழுது விட்டனர் – விட்டாங்கே – மாதர் மகளிரும் மைந்தரும்மைந்துற்றது தாது ஏறு மன்றத்து அயர்வர் கழூஉ (கலித்தொகை *103 : 58–62*) பொழுது போக்காக நிகழ்த்திய கூத்துக்களை ஆடவர் மகளிரொடும் மகளிர் ஆடவரோடும் இணைந்து ஆடும் வழக்கம் இருந்துள்ளது.

**பரதநாட்டியம், கிராமிய நடனம், ஒயிலாட்டம், கரகாட்டம், தம்பட்டம், பாம்பு நடனம், மயிலாட்டம், மோகினியாட்டம் இவை யாவும் முறைப்படி பயிற்சி அளிக்கப்படும்.**

தொடர்பு : சிவயோகம், இலண்டன்

**தொழில் முறையில் கூத்து :**

பண்டைத் தமிழரின் வாழ்க்கைப் யோடிணைந்த கூத்துக்கலை வழிபாட்டிலும், பொழுது போக்கிலும் மட்டுமின்றித் தொழில் முறையாகவும் மிகவும் பயன்பட்டது. தொழில் முறையான கூத்துக்கள் முறையாக நிகழ்த்தப்பட்டன. இத்தகைய கூத்துகளை நிகழ்த்தியவர் ஆற்றுப்படைஇலக்கியங்களுக்குக் காரணமாய் குறிப்பிடப்படுகின்ற பாணர், பொருநர் வரிசையைச் சேர்ந்த கூத்தராதல் வேண்டும். கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக்காட்சி உறழத்தோன்றி – தொல் : புற இயல் : *36*

இக்கூத்தர் கற்றறிந்த புலவராகவும் இருந்தனர். இவர்களால் நிகழ்த்தப்பட்ட கூத்துக்கள் முறையானவையாகவும், நல்ல கருத்துக்களைப் பரப்புவனவாகவும் இருந்தன. இதனால் அரசவைகளில் இவர்களுக்குச் சிறந்த மதிப்பிருந்தது. இவர்களில் பெண்பாலரே விறலியர் எனப்பட்டிருத்தல் வேண்டும். இத்தகைய கூத்தருக்குக் கூத்துக்கலை ஒரு தொழிலாகப் பயன்பட்டு நல்ல வருமானத்திற்கு வழி வகுத்தது. திறம்பட ஆடினோர் அரசவையில் பாராட்டும் பரிசிலும் பெற்றனர். வல்வில் ஓரியை நாடிச் சென்ற கூத்தர் பசி என்பதே இனி அறியாத அளவிற்கும் கூத்துத் தொழிலையே நினைக்க வேண்டாத அளவிற்கும் பொருள் பெற்றனர் என்று புறாநனூறு கூறுகிறது.

தொழில் முறையில் கூத்துக்கள் நிகழ்த்தப்பட்ட போது கூத்தில் ஆடல் நுட்பங்கள் கவனமாகப் பின்பற்றப்பட்டன. (உதா : விறலியர் கூத்தாடும் போது கூத்திசைக்கு இடையூறாக அதிக வளையல்கள் அணியக்கூடாது என்று கட்டுப்பாடு இருந்தது. இத்துணை நுட்பங்களுடன்நிகழ்த்தப்பட்ட கூத்து பேரும் புகழும் ஈட்டித்தந்தது மட்டுமின்றி நல்ல தொழிலாக அமைந்து வருமானத்திற்கு வழி வகுத்ததில் வியப்பொன்றுமில்லை.

**அகவாழ்வில் கூத்துக்கலை :**

வழிபாட்டிலும் தொழில் பொழுதுபோக்கிலும் மட்டுமின்றி, கூத்து பழந்தமிழர் காதல் வாழ்விலும் பெரும்பங்கு கொண்டிருந்தது. கூத்து நிகழ்ச்சிகளின் போது காதலர் ஒருவரையொருவர் சந்தித்துக் காதலை வளர்த்துக் கொள்ள வாய்ப்பிருந்தது.

ஒருங்கு நாம் ஆடும் குரவையுள் நம்மை
அருகினர்போல நோக்கி

துணங்கை போன்ற கூத்துக்கள் நிகழும் வேளை இந்த வாய்ப்பு காதலர்க்கு மிகுதியும் இருந்தது. ஆதலின் துணங்கை நிகழும் நாளைக் காதலர் எதிர்பார்த்திருந்தனர்.

வணங்கு இறைப்பணைத்தோள் எவ்வளை மகளிர்

துணங்கை நாளும் வந்தன.

ஆட்டனத்தியை இழந்த ஆதிமந்தி, தான் காதலனை துணங்கை விழாவில் தேடியதாக அறிகிறோம். காதலர்க்குத் தமது காதலை உறுதிப் படுத்திக் கொள்ளவும் சிறந்த சாதனங்களாகக் கூத்து நிகழ்ச்சிகள் அமைந்தன. தலைவன், தலைவி இரகசியங்களைப் பரிமாறிக்கொள்வும் கூத்து நிகழ்ச்சிகள் வாய்ப்பளித்தன.

காதலின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்ற கூத்து காதலில் ஊடல் ஏற்படவும் ஏதுவாயிற்று. பிற மகளிரொடு துணங்கையில் மகிழ்ந்து ஆடிய தலைவன் தன் நிலை மறந்து ஆடியதால் அவனது ஆடை கிழிந்து போயிற்று. இதைக் கண்டு தலைவி ஊடல் கொள்கிறாள்.

நிரைதொடி நல்லவர் துணங்கையின் தலைக் கொள்ள

கரையிடக் கிழிந்த நின் காழகம் உரையாக்கல்

வெறியாட்டு காதலரால் விரும்பப்படாத ஒரு கூத்து. பிரிவின் காரணமாக உடல் மெலிந்த தலைவியின் அன்னை, அது அணங்கால் ஏற்பட்டது என வேலனை வெறியாட அழைப்பாள். அவன் வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும் என்று தொல்காப்பியம் குறித்துள்ளது. இவ்வாறு கூத்தே காதலின் உடன் பாட்டிற்கும், இடர்ப்பாட்டிற்கும் காரணமாகியுள்ளது.

**புறவாழ்வில் கூத்து:**

பழந்தமிழரின் வாழ்வில் மட்டுமின்றி மக்களின் புறவாழ்விலும் கூத்துக்குச் சிறப்பிடம் இருந்தது. போருக்குப் புறப்படும் வீரனை ஊக்குவிக்கவும், போரில் மன்னனை நகையாடிக் கூத்துக்கள் நிகழ்த்தப் பட்டன.

இவ்வாறு புறநிலையில் நிகழ்ந்த கூத்துக்கலை

1. போருக்கு முன் நிகழ்ந்த கூத்துக்கள்

2. போருக்குப் பின் நிகழ்ந்த கூத்துக்கள்

3. தேருக்கு முன், பின் நிகழ்ந்த கூத்துக்கள் என வகைப்படுத்தலாம்.

போருக்கு போகும் முன் பகைவர் மேல் சினம் கொண்டு ஆயத்தமின்றி வெறி பொங்க கூத்து ஆடப் பட்டது. போருக்கு போகும் வீரரை ஊக்குவிக்க ஆயத் தத்துடன் கூத்து நிகழ்த்தப்பட்டது.

சினமாந்தர் வெற்றிக் குரவை

போருக்குப் பின் நிகழும் கூத்துக்கள் பகை மன் னரைப் பழித்து ஆடும் கூத்து எனவும், வெற்றி வீர னைப் பாராட்டி எழும் கூத்து எனவும், வெற்றி மகிழ்ச் சியால் நிகழும் உவகைக்கூத்து எனவும் பல வகைப் படும்.

பட்டவேந்தனை அட்ட வேந்தன்

வானோர் ஆடும் அமலை

வாடாவள்ளி வயவர் ஏத்திய ஓடாக்கழல் நிலை

கூத்தால் புகழ்வதே கழல் நிலையாகும். முன் தேர் குரவை, பின் தேர் குரவை போன்ற தேர் கூத்துக் களும் நிகழ்த்தப்பட்டன.

வென்ற கோமான் முன்தேர்க்குரவையும்

ஒன்றிய மரபின் பின்தேர்க்குரவையும்

வென்ற கோமான் துணங்கை ஆடியதாக

இலக்கியம் கூறுகிறது.

குருதி பணிற்றும் புலவுக்களத்தோனே

துணங்கை ஆடிய வலம்படு கோமான்

இத்தகைய கூத்துக்கள் உணர்ச்சி மிகுந்தனவாய் இருந்துள்ளன.

இவ்வாறாக கூத்துக்கலை மக்களுக்கு வாழ்க்கையின் எல்லாவித நிலைகளிலும் பங்கு கொண்டு விளங்கியுள்ளது.

## தந்தை பெரியார்

ஒரு செல்வந்தராய் பிறந்தார், எனினும் ஏழைகளுக்காக பாடுபட்டார்.

ஒரு ஆணாய் பிறந்தார், எனினும் பெண்களுக்காகவே குரல் கொடுத்தார்.

ஒடுக்கும் சாதியில் பிறந்தார். எனினும் ஒடுக்கப்படும் சாதி மக்களுக்காகவே உழைத்தார்.

தன் வாழ்நாள் முழுவதையும், ஒடுக்கப்பட்ட தமிழர்களுக்காகவே வாழ்ந்து முடித்தார்

சொன்னவர் . சுப. வீரபாண்டியன்

# எல்லாம் இழந்தபின்னும்...

அந்த வீட்டிலிருந்து வெளியே வரும் பொழுதெல்லாம் இப்படித்தான் அந்த முயலும் சிங்கத்தின் குகையிலிருந்து வெளியே வந்திருக்கும் என்ற நினைப்பு எப்பவும் வரும். வரும் வழியெல்லாம முப்பது ஈரோவைப்பற்றிய கனவும் அது இருக்கா இருக்கா என்று ஜீன்ஸ் பொக் கற்றை தடவி பார்ப்பதும் வெளியே எடுத்துப்பார்த்து தொலைத்த நாட்கள் நினைவில் வர மனம் எதை எதையோ நினைத்துப் பெருமூச்சை வெளியே தள்ளியது. இப்பொழுதெல்லாம் வாழ்வின் பிடிப்பு மெல்ல நழுவுவதுபோல் உணர்வு எழுந்து கொண்டே இருக்கிறது. எல்லாமே கொஞ்ச நாட்களில் சலிப்புத் தட்டிவிடுகிறது. எப்பவும் வேலையையும் காசையும் அசைபோடும் மனசு எந்த வேலையென்றாலும் என்னைக்கேட்காமலே ஓம் என்று தலையாட்டுகிறது. எல்லா வேலையையும் ஒருநாள் தூக்கி எறிந்துவிட்டு எந்த அழுத்தமும் இல்லாமல் பழையபடி கவிதையை, கதையை அசைபோட்டபடி.

இப்படி பல முறை முடிவுகள் எடுத்திருக்கின்றேன். அப்பொழுதெல்லாம் இல்லாமை பல வழிகளில் மனவெளியில் தன் இருப்பை உணர்த்தி என் உறுதியை பொல பொலவென உடைத்தெறியும். ஆனால் இம்முறை அப்படியல்ல இனி இயலாது என்று கைகளும் கால்களும் கூட மறுக்கத் தொடங்கிவிட்டன. மனமோ வங்கிக்கடனைக் கணக்குப் பார்த்து உடைந்து விழத்தொடங்கியது. என்ன செய்ய ? அம்மா புத்தகம் வாங்க நிறைய காசு வேணும். மகனின் குரல் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டே இருந்தது. நான் உடைந்து விழும் பொழுதெல்லாம் காற்றோடு அடிபட்டுப் போகும் சருகைப் போல. வெள்ளைக்காரியும் என்னை அப்படித்தான் நினைத்திருக்கிறாள்.



இல்லாவிட்டால் ஒரு சின்ன தவறுக்காக படிகளில் நடக்க முடியாவிட்டாலும் துவண்டு கொண்டு வாயில் துடைக்கும் துணியைக கவ்வியபடி பாய்ந்து வந்த தோற்றம் ஏதோ ஒரு பெரிய நாய் என்னை கடித்து துப்புவதற்கு வருவதுபோல். ராகினி வீட்டு ஜில்லும் அப்படித்தான் வந்தது. அதுக்கு தன் குட்டிகளை நான் தூக்கி விடுவேனோ என்ற பயம். ஆனால் வெள்ளைக்காரிதான் எஜமானியாகவும நான் ஏதோ அடிமை மாதிரியும் அப்படித்தான் நினைத்திருக்கிறா. நான் பிறந்து வளர்ந்த என்ர மண்ணிலையும் கூனிக்குறுகி அவர்கள் கேட்கும் பொழுதெல்லாம் கர்ணனோடு ஒட்டிய கவசம் மாதிரி காவித்திரியும் அடையாள அட்டையைக் காட்டி களைத்து இவைகள் எல்லாம் வேண்டாம் என்றுதானே ஓடிவந்தனான். வந்த இடத்திலும்.



இந்த பொழுதுகளிலெல்லாம் அண்ணா பொகவந்தலாவிலிருந்து வீட்டு வேலைக்கு அனுப்பிய ஒவ்வொரு முகமும் என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருக்கும். அதிலும் கடைசியாக வந்த குமார். அவன் இப்ப கொழும்பில பெரிய மொத்த வியாபாரி. காலம் எப்படி எல்லாம் சுழன்றுகொண்டு ஓடுகிறது. ஏணிப்படியின் உச்சத்தில் இருந்த வாழ்க்கை என்ன நடக்கிறது என்று சிந்திக்கும் முன் மலைப்பாம்பின் வாய்க்குள் அகப்பட்டுச் சட்டென்று கீழ் இறங்கிய விளையாட்டுப்போல் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. இயலாமையும், இல்லாமையும் இணைந்து வேதனைத் தீயை வளர்த்தபடி இருக்க இவைகளிலிருந்து மீளமுடியாத மனசு பெரும் குரல் எடுத்து அழுகிறது.

இருட்டு எங்கும் இருட்டு. இலைகளை இழந்த மரங்களும், மௌனித்து கிடக்கும் வெளிகளும் வெறும் வெள்ளைச்சுவர்களும். சில சமயம் இந்த வெள்ளைச்சுவர்கள் என்னைக் நெரிப்பது போல் இருக்கும் பல சமயம் விரல்களை நீட்டியும் மடித்தும் என்னை குற்றவாளி ஆக்கும். இனி இயலாது வெள்ளைக்காரியின் வீட்டுச் சுவர்களும் கதவுகளும்

கூட என்னை இப்படித்தான் அடிக்கடி முறைத்து பார்க்கும். அங்கு வேலை செய்யும் பொழுதெல்லாம் மனம் ஏதோ ஏதோ நினைத்து அழுதாலும். கை சுவர் பிடிக்க, கண் மணிகூட்டை பார்க்க, மனம் பெருக்கல் வாய்பாட்டை பெருக்கி பார்க்கும். இந்த மாதம் அண்ணாவுக்கு காசு அனுப்பவேணும். அனுவுக்கும் புத்தகம் வாங்க நிரம்பக் காசு தேவை எண்டு சொன்னவர். கிறிஸ்மஸ் காசு ஜம்பது ஈரோ தருவா அதையும் சேர்த்து அனுப்புவம். இப்படிப் பல கற்பனைகள் முப்பது ஈரோவைச் சுற்றி சுற்றி ஓடும். கை படிகளைத் துடைக்கும்: வெள்ளைக்காரி கண்ணாடி முன்னால இருந்து கொண்டு ஒரு கண் என்னிலும் மறு கண் கண்ணாடியிலுமா இருப்பதை பார்த்தால் ஆறுகுள்ளரும் இளவரிசியும் கதைதான் ஞாபகத்தில வரும் அதிலையும் இப்படித்தான் சூனியக்காரி இளவரசியை வீடுதுடைக்க விட்டிட்டு எந்த நேரமும் கண்ணாடிக்கு முன்னால இருந்து கொண்டு கண்ணாடி கண்ணாடி இப்ப சொல்லு நான் அழகா இல்லை அவள் அழகா? என்று கேட்டுக்கொண்டே இருப்பா. இவவும் அப்படித்தான் கேட்கிறவோ? நான் எனக்குள் சிரிப்பதை பார்த்தால் போதும் நான் நினைக்கிறன் நீ எங்கேயோ போய்வராய் போல இருக்குது எனக்கு அப்பவும் சிரிப்புவரும். இந்த வெள்ளைக்காரர் எப்ப எப்படி இருப்பினம் என்று சொல்லவே முடியாது. போன கிழமை சிரிச்ச மனுசிதானே எண்டு சிரிச்சா இந்தக் கிழமை பிடரியை சிலுப்பிக் கொண்டு இருக்கும். கறுப்பிக்கு காசு வேணும் அவள் என்ன சொன்னாலும் வருவாள். இவள் அகதிதானே. இவளுக்கு மானம் ரோசம் ஒன்றும் இருக்காது இருக்கவும் கூடாது அப்படித்தான் மனதுக்கள் என்னைப்பற்றிய ஒரு வரைவிலக்கணத்தை வைத்திருப்பா. ஒரு நாள் வேலை செய்யும் பொழுது கேட்டாள். உனக்கு உன்ர நாட்டை பார்க்க ஆசை இல்லையே? ஏன் இல்லை ஒரு நாள் எண்டாலும் நான் பிறந்த வீட்டை பார்க்கவேணும். அப்ப என்னத்துக்கு இங்க வந்தனீர் ? மனிதனுடைய உணர்வுகளை புரிந்து கொள்ள முடியாத ஜென்மத்திடம் என் உணர்வைக் கொட்டியதை நினைத்து வெட்கப்பட்டுபோனேன்.

ஓம் நான் ஏன் எல்லாவற்றையும் உதறிப்போட்டு இங்க வந்தனான்? ஏன் இப்படி ஒரு வேலைக்காரி வாழ்க்கைக்குள் உழன்று கொண்டு இருக்க வேணும். வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு போனால் அங்கேயும் அதே தும்புத்தடியும் மப்பண்ணிற தடியும் எனக்காக காத்துக்கொண்டிருக்கும். எப்படியெல்லாம் என்னை அம்மா வளர்த்தா. நினைவுகள் பெருக பெருக இனி இந்த வீடு இருக்கும் தெருவுக்குள் என் கால்கள் வராது என்ற நினைப்பும் சேர விறு விறுவென கால்கள் நடைபோடத் தொடங்கும். ஆனால் எங்கேயோ என் முதுகிலயோ, அல்லது புறங்காலிலையோ எங்கேயோ அந்த வீட்டு தும்புத்தடியும் மப்பண்ணிற தடியும் என்னோட ஒட்டிக்கொண்டே வரும்.

இப்படித்தான் எனக்குள் எழும் எல்லா உணர்வுகளும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் பொய்யாகி போகும் பொழுது வாழ்க்கை வெறுத்து போய்விடுகிறது. வருவன் என்று சொல்லிவிட்டுத்தானே வந்தனான். கட்டிப்பிடித்து பின் கைகள் இறுகி, விரல் நுனி தடவி, கண்கள் கலங்கி, ஏங்கி அம்மா நின்ற காட்சி அப்போதும் கால்கள் தன் பாட்டில் நீட்சியான பாதையை நோக்கி நடைபோட்டன. இடைவெளிகள் நீள நீள மனம் பெருங்குரல் எடுத்து அலைபோல் அழுதிருக்கும். அலைகள் அழுவது யாருக்கும் புரியாது. இலைகள் உதிரும் பொழுது மரங்கள் மௌனித்து அழுவது போல்தான் அலைகளும். நடந்து நடந்து பாதைகள் இல்லாத இடமெல்லாம் பாதைகள் வகுத்த பொழுது எத்தனை முகங்கள் நடைபோடத் தொடங்கின. வேர்களின் முகங்களில் காலால் புழுதியை வாரி இறைத்தபடி நடந்தன. புழுதி அப்பிய முகங்களில் வழிந்த கண்ணீரால் புழுதியை கழுவவே முடியவில்லை. இப்பொழுது நான் வேராகி வேர்களில் முளைத்ததெல்லாம் மலர்கள் என முகிழ்த்து நின்ற பொழுது அவை நெருஞ்சி முட்களாக முகம் காட்டி சிரித்தன .அப்போதுதான் நான் முதல் முதலாக உடைந்து போனேன். மறுபடியும் என் வேர்களை தேடினேன் அழுதழுது தேடினேன். அவை அழுது, களைத்து, உக்கி, நெருப்போடு போன சேதி காலம் கடந்து............

கரை கடந்து, கடல் கடந்து விலகி வரும் பொழுது அலைகள் உடைந்து சிதறி அழுத பொழுது என் காதுக்கு கிட்டவே இல்லை.

ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு அகதிகளாகச் சென்று கொண்டிருக்கின்றார்கள். இதுவரை 2000 அகதிகள் மட்டில் ராமேஸ்வரம் சென்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. திருமலையிலிருந்து மன்னார் வழியாகத் தமிழகம் செல்ல இருந்த ஆயிரம் பேரை இலங்கை இராணுவம் தடுத்து நிறுத்தியுள்ளது.

மல்லாந்து படுத்து தனக்குதானே துப்புகிறது என்றல்லவா நினைத்திருந்தேன். யாரும் அறிய முடியாத ஆழத்தில் துயர்கள் நிரம்பி வழியும் பொழுது வெடித்து ஓவென பெரும் இரைச்சல் கொண்டு எழுந்து பாறாங்கற்களில் மோதி மோதி அழுதது., அழுத அலைகள் கரைகளுக்கு வருவதும் பின் பெரும் துயர் சுமந்து திரும்பியதையும் அது யாருக்கம் சொல்லவே இல்லை. கணவர் என்ற பெரும் சுவர் எல்லாவற்றையும் மறைத்துவிட்டது. எல்லா நினைவுகளுமே குளத்தில் போட்ட கல்லாக அடங்கிக் கிடக்கிறது. அவை மேலெழும் பொழுது கலங்கிப்போகும் குளம்போல்தான் நானும்.

எந்த நினைவையும் என்னால் தூர வீசி எறிய முடியவில்லை.அவை எப்போதும் ஓர் மூலையில் பதுங்கியிருந்து சில சமயம் என்னைப் பார்த்து சிரிக்கும் பல சமயம் முறைக்கும்.

அது எல்லோருடைய குரலிலும் என்னைக் கேள்வி கேட்கும். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த அக்காவிடம் எதை எதையோ கேட்க மனம் துடித்தது. ஆனால் பாலைமரம் எப்படியிருக்கிறது? என்று மட்டும்தான் கேட்க முடிந்தது. கடந்தகாலங்கள் என்னைப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறதா? அல்லது நான் அதைப் பிடித்து வைத்திருக்கின்றேனா? எல்லவாற்றையும் உதறிவிட்டுத்தானே வந்தேன்.

பகலைத் தொலைத்த நாட்கள் அவை. வெறும் இருட்டு மட்டுமே பரவிக்கிடந்தது. எல்லாவற்றையும் தொலைத்த வெறுமை. மனிதர்களின் புரியாத மனம் குழம்பிப்போய் கிடந்தது

குழம்பிப்போய் கிடக்கும் வானத்தை போல. சில வேளைகளில் மட்டும் வெளிச்சம் பரவும் அதுவும் சில நிமிடங்களில் ஓடி ஒளிந்து கொள்ளும். இரவின் அமைதி தொலைந்து போயிருந்தது. ஏராளமான கனவுகளைத் தொலைத்து நடுங்கிய இரவில் வீடும், காற்றும், அந்த ஊரும், சந்தியும் எல்லாவற்றையும் உள்வாங்கி தனக்குள் புதைத்து வைத்துக் கொண்டிருந்தது. யாழ்ப்பாண வீதிகள் அங்கு வாழ்ந்தவர்களின் மனதை பிரதிபலித்துக்கொண்டிருந்த காலம் வேற்று முகங்களினால் பறிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. எல்லா நிகழ்வும் நிரப்படாத இடைவெளியாய் நீண்டு கொண்டே போனது. காட்டிக் கொடுப்போரின் விரல்களும் எல்லா திசைகளிலும் நீள நீள காணாமல் போவோரின் பட்டியலும் நீண்டு கொண்டே போனது. அதே விரல்கள் என் தோழியின் கணவர் முன் நீண்ட பொழுதுதான் எனக்குள் பயம் இன்னும் அதிகமாக படரத் தொடங்கியது. இலைகள் அசைந்தாலும், இரவு கவியத்தொடங்கினாலும், நாய்கள் குரைத்தாலும் எல்லாவற்றுக்குமே பயம். பயம் வாழ்க்கையை ஆதிக்கம் பண்ணத் தொடங்கியது. கற்பனைகளை சுமந்த முகங்களெல்லாம் மரண பயத்தை சுமந்தபடி உலவியதை பார்க்க வாழ்க்கையின் கொடூரம் புரியத் தொடங்கியது. சிரித்தும், கதைத்தும் கழிந்த வாழ்க்கை அடங்கி, ஒடுங்கி, நடுங்கி வாழமுயன்றபோது நாளைய வாழ்வு கேள்விக் குறியானது. கேள்விகள் நிறைந்து நிறைந்து வழியத் தொடங்கியது. அத்தனை முகங்களிலும் துயரமும், பயமும், கேள்வியும் மட்டுமே. போரின் நிஜமுகத்தை எதிர் கொள்ள என்னால் முடியவில்லை என் முகத்தை எங்கேயாவது ஒளிக்க வேண்டும்.

பனிப் புகார் என் அடையாளத்தை மறைக்கத்தொடங்கியது. வீட்டை விட்டு ஓடியகால்கள் பனிகளுக்குள்ளும், ஆற்றிலும் புதைந்து விறைத்தன. புதைந்த கால்களின் அழுகுரல் ஊரில் கேட்டது போலவே. ஆனால் இங்கு ஊர் அசையவே இல்லை. ஏது இயலாது என்று ஓடி வந்தேனோ அது இங்கேயும்......... வழமைபோலவே என் கால்கள் புதிய பாதையை நோக்கி நடந்து நடந்து முற்றுப்புள்ளியில் நின்றபோது அடையாளங்களை அழித்தும் ஒழித்தும் முகத்தில் பொய்களை அப்பியபடி இங்கேயும் விஷ ஜந்துக்கள் பற்களை நீட்டியபடி காத்திருக்கின்றன என்பதை அறியாத அப்பாவியாய்.

# மரணத்தின் பிடியில் தமிழீழம்

சொந்த மண்ணிலேயே தமிழீழ மகக்கள் அகதிகளாகும் கொடுமை நடந்து கொண்டிருக்கின்றது. குழந்தைகள், இளைஞர்கள் பெண்கள் உட்பட பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் மீது தினமும் தாக்குதல்கள் தொடருகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராபட்சமான போக்கு இன்னொரு இடியாகத் தாக்குகின்றது.

இந்த நிலையிலும் தயக்கம் ஏன்? ஈழத்தமிழ் மக்களே வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடலாமே!

அப்போது எல்லாவற்றிக்கும் பெயர் இருந்தது. வீட்டுக்கும், அறைகளுக்கும், எங்களுக்கும். இப்போ வெறும் கற்குவியலும் மணலுமாக இருக்கும் வீட்டுக்கு என்ன பெயர்? இங்கு நாங்கள் இருக்கும் வீட்டுக்கு பெயர் அகதி முகாம். எனக்கும் அகதி பொம்பிளை விறாந்தை, கோல், குசினி, சாப்பாட்டறை, சாமி அறை, படிக்கிற அறை, படுக்கை அறை எல்லாமே ஒரு அறை. அம்மாவுக்கு கடிதம் எழுதுவம் என்று நினைத்தவுடன் மனம் வரிகளை எழுதி எழுதி அழித்துக்கொண்டு இருக்கும். நான் நலம் அதுபோல் நமசிவாய பள்ளிக்கூடத்தில சிவஞான ரீச்சர் கடிதம் எழுதுவது எப்படி? எண்டு எப்ப காட்டித்தந்தாவோ அதில இருந்து இப்படித்தான் எழுதிறன். வெளியில போனாலும் வெள்ளைக்காரர் எப்பிடி சுகமா? ஏன்று கேட்டால் போதும் எங்கிருந்துதான் இந்த பொய்ச் சிரிப்பு வந்து ஒட்டிக்கொள்கிறதோ தெரியவில்லை. எல்லாமே பொய்யாகி நான் உடைநது அழும்பொழுது வழியும் கண்ணீர் கூட பனியில் இறுகி நிற்கும்.

அழுவதற்கும் நேரம் இல்லாத வாழ்க்கை. எவர் கண்களுக்கும் புலப்படாத விலங்கு கால்களில் பூட்டப்பட்டுக்கிடந்தது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நடந்து நடந்து அலுக்கும் மனதை இசைக்கும் கருவியாக பழைய நினைவுகள். நினைவுகள் தழும்பி தழும்பி பல சமயம் அதுவும் அழும். அம்மா, வீடு, ஜிம்மி என்னை அழவைக்க வேறு எதுவும் தேவையேயில்லை. என்மேல் யார்கை பட்டாலும் பாய்ந்து கடிக்கும் ஜிம்மி. அம்மா சொல்லுவா நீ ஜிம்மிவேணுமெண்டு ஜில்லிட்ட கடி வாங்கினனிதானே அதனாலதான் உனக்கு ஆர் அடிச்சாலும் அவையளை கடிக்குது. எங்கட ரோட்டில உள்ள எல்லாரும் சொல்லுவினம்.

இது நாய் இல்லை கடவுள்.

ஓம் நானும் அப்பிடித்தான் நினைக்கிறன் எண்டு அம்மாவும் சொல்லுவா. அது எப்பவும் இப்பிடித்தான் சரியா நாலுமணிக்கு அம்மாவோட சேர்ந்து கேற்றில காவல் நிற்கும். சந்தியில என்ரை வெள்ளை சாறி தெரிஞ்சா போதும் பாய்ந்து கொண்டுவரும் தண்ணி எடுக்க ரோட்டில நிற்கிற எல்லாரும் சொல்லுவினம் சுகந்தி பள்ளிக்கூடத்தால வறாள்.

என்ர அம்மா மாதிரியே ஜிம்மியும் எப்பவும் என்னோடையே இருக்கும். எல்லாரையும் கடிக்கிற ஜிம்மி ஏன் கணக்கு மாஸ்ரை கடிக்கிதில்ல? விடியாத இருட்டில இருட்டு மாதிரியே இருக்கிற அவரின்ட நிழல் விறாந்தை யன்னல் கண்ணாடியால தெரியும். பிறகு ராகினி, கமலா வருவினம் எனக்கும் ராகினிக்கும் மடக்கை கணக்கு படிப்பிக்கத்தொடங்குவார். மார்கழி மாதம் வந்தா போதும் பண்ணைப் பாலசச்சத்தம், நல்லூர்மணி, பெருமாள்கோவில் சுப்பிரபாதம், எல்லாம் யாழ்தேவிகூட காதுக்க கூவும் அதில நாங்கள் நித்திரை தூங்கிறதை பாங்கொலி காட்டிக்கொடுக்கும். இறுக்கி குட்டுவார். ஆனால் ஜிம்மி பார்த்துக்கொண்டு சும்மா இருக்கும். சோதனை வந்தாபோதும் நானும் அக்காவும் சரஸ்வதி கலண்டருக்கு சண்டை போடத் தொடங்கிவிடுவம். பிறகு அம்மா பூபாலசிங்கம் கடையில இரண்டு மெய்கண்டான் கலண்டர் வாங்குவா. நான் கலண்டரில எனக்கு மட்டும் விளங்கிறமாதிரி ஏதாவது குறிப்பு குறிச்சுவைச்சிட்டு அதில கட்டியிருக்கிற சணலில பிடிச்சு ஆட்டிக்கொண்டு போவன். அக்கா சொல்லுவா எனக்கென்ன கடவுள் உன்னை கோபிப்பார். அக்கா எப்பவும் இப்பிடித்தான். நல்லா பொய் சொல்லிறன் எண்டு அம்மாட்டை கோள்மூட்டுவா. அம்மாவும் நல்லூர் உதய பூஜைக்குபோற நேரமெல்லாம் திருஞர்ன சம்பந்தர் ஆதினத்துக்கு கூட்டிக்கொண்டுபோய் மணி அய்யரிடம் சொல்லுவா. சுவாமி இவள் வாய்திறந்தா பொய் சொல்லிக்கொண்டே இருக்கிறாள். அவரும் ஆதினத்தில பெரிய கரும்பலகையில ஒட்டியிருக்கிற படத்தை காட்டுவார். இங்க பார் பொய் சொன்னா என்ன தண்டனை கிடைக்கும் கண்டியோ? அதில அம்புலிமாமாவில வருகிறவை மாதிரி கொம்புவைச்சு பெரிய மீசைவைச்ச அரக்கர்கள் நகங்களை பிடுங்கிக் கொண்டு இருப்பினம். மற்றவை கொதிக்கிற எண்ணைக்குள்ள கைவைச்சு அமுக்குவினம். எனக்கு பயம்வந்திடும். அக்கா என்னை பார்த்து சிரிப்பா. பிறகு சுடச்சுட கற்கண்டு போட்ட பால்தீர்த்தம் தருவார். இரண்டு தரம் வாங்கி குடிச்சதுக்கு அம்மாட்டை நுள்ளுவாங்குவன். அக்கா அம்மா சொல்லிற மாதிரியெல்லாம் கும்பிடுவா. ஆனால் நான் நாங்கள் வீட்டை போறதுக்கிடையில காப்புக் கடைக்காறன் பலூன் கடைக்காறன், இனிப்பு விற்க்கிற பொரிகடலை வண்டில்காரன் எல்லாரும் எழும்பி கடையை திறந்திட வேணும் கடவுளே எண்டு முருகனிட்டை கேட்டுகொண்டே இருப்பன்.

அக்காவின்ர பள்ளிக்கூட சூட்கேஸ் உள்முடியில சரஸ்வதி, பிள்ளையார் எல்லாரையும் ஒட்டிவைச்சிட்டு படிக்க முதல் கும்பிட்டிட்டுதான் படிக்கத் தொடங்குவா. சமயபாடத்தில கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பா. நரியை பரி ஆக்கினது ஆரெண்ட சொல்லு, திருமறைக்கதவை திறக்க பாடினது யார்?

மூடப்பாடினது யார்? நீ முதல்ல சமயபுத்தகத்தை மூடு இவையளுக்கு வேற வேலை இல்லாமல் அற்புதங்கள் செய்தவை இவையாலதான் சமயபாடத்தில கேள்வி கூடிக்கொண்டே போகுது. அதுக்கும் அம்மாட்டை கோள்மூட்டி அடிவாங்கி தருவா. சோதனை முடிந்த பிறகு இரண்டு விரலில ஒண்டை தொடு எண்டு நெடுகலும் கேப்பா. ரஞ்சன், ராஜன், ரவி, பபா எல்லாரும் பிறேமக்கா வீட்டுக்கு பின்னால இருக்கிற சோனக வழவுக்க போய் வெடிக்கிற காய்க்கு எச்சில துப்பிப்போட்டு கண்ணை மூடிக்கொண்டு வெய்யிலில பிடிப்பம். அது வெடிச்சா பாஸ் அக்கான்ர காய் சத்தத்தோட வெடிக்கும். பிறகு பள்ளிக்கூடத்தால வரேக்க இந்த கல்லை வீடுமட்டும் காலால தள்ளிக்கொண்டு போன நான் பாஸ்பண்ணுவன் எண்டு சொல்லி தள்ளிக்கொண்டே வருவா அக்காவுக்கு எல்லாம் சரியாத்தான் இருக்கும். ஆனா சோதனை மறுமொழி மட்டும் மாறிவரும். பிறகு கொஞ்ச நாளைக்கு எனக்கு பிறேமக்கா வீட்டுக்கு போய் எங்கட வீட்டில இல்லாத திருவாத்தி பூ பிய்க்கிற வேலை இருக்காது. எனக்கு ஒரே யோசனையா இருக்கும் எல்லாம் சரியாத்தானே வந்தது. பிறகேன் அக்கா பாஸ்பண்ணேல்ல?

எந்தக்கேள்விக்கும் எனக்கு சரியா விடை கிடைப்பதே இல்லை. எந்த வேலை தேடிப்போனாலும் முன் அனுபம் இருக்கா.......?

நீங்க வேலை தந்தால்தானே முன் அனுபவம் வரும். வெள்ளையனின்ர முகம் மெல்ல சிவக்கும்.

இந்த வேலைக்குப் படிச்சனியோ?

உங்கட அரசாங்கம் என்னை மொழியே படிக்க விடேல்லை.

ஆனா உனக்கு வாய் பெரிசா இருக்கு.

எல்லாம் உங்கட ஆட்க்களோட பழகிப் பிடிச்சது.

உனக்கு சரியான வேலை ஒன்று இருக்குது.


காலையில கடை திறக்க முதல்வந்து கூட்டி துடைச்சிட்டு போ. இப்ப எனக்கு காது எரியும் ஏன் அதுக்கு முன் அனுபவம் வேண்டாமோ? என்ர கோபத்தை கதவில மட்டும்தான் காட்ட முடிந்தது. பகல் வருவதும் போவதுமாக இருந்தது. ஆனால் இரவுமட்டும் நிரந்தரமாக தங்கியிருந்தது. கடலையும் காற்றையும் தொலைத்து உயர்ந்த கட்டிடங்களுக்கிடையில் சிறு குப்பையாக வாழும் வாழ்க்கை சலிப்பும் வெறுப்பும் கலந்த கலவையாக. தொலைகாட்சி தன்பாட்டில் ஓடிக்கொண்டிருந்தது. அங்கேயும் வெள்ளைக்காரி கதிரையில இருக்க அமெரிக்க கறுப்பு இன மனுசி மண்டியிட்டுவீட்டை துடைத்துக்கொண்டிருந்தாள். எரிச்சலுடன் சனலை மாற்றினேன். ஓட்டப்போட்டி வெள்ளையர்களுடன் கறுத்தவர்களும் விடதே விடதே என மனம் பதைபதைத்துக் கொண்டிருந்தது. பாடசாலையால் வந்து பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு சில வேளைகளில் என்னிடம் பதிலே இருக்காது. நாங்கள் ஏன் அம்மா கறுப்பா பிறந்தனாங்கள்? இந்த சோப்போட்டு குளிச்சா வெள்ளையாவருவமோ? லூக்காஸ் இதுபோட்டுத்தான் குளிக்கிறவனாம். அதுதான் அவன் வெள்ளையா இருக்கிறானோ?. அம்மா ஏன் சாத்தானையும் கள்ளனையும் கறுப்பா காட்டினம்? பள்ளிக்கூடத்தில எல்லாரும் படம் கீறேக்க என்னை பார்க்கினம். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த பெரியமகன். மை பமிலியை பற்றி எழுதவேணும் என்னுடைய அம்மா ஒரு புட்ஸ் பிறா (துடைக்கிறமனுசி) எண்டே எழுதிறது. மற்ற பிள்ளையள் எல்லாம் தங்கட அம்மா லேரா (ஆசிரியர்), பாங்கில புக்கள்ரரின்(கணக்காளர்), எண்டு எழுதிக்கொண்டு வருவினம் எங்கட அம்மாவும் ஜ ஏ பி எல்லாம் படிச்சவ எண்டுதானே அப்பா சொன்னவர். பிறகேன் சுமிற்சிக்(ஊத்தை) வேலையெல்லாம் செய்யிறா? எங்களோட படிக்கிறவை ஆராவது கண்டிட்டா எங்களுக்கு வெக்கமா இருக்கு அம்மா. ஓம் என்கிறமாதிரி மற்றப்பிள்ளைகளும் என்ர முகத்தை பார்ப்பினம். பிள்ளைகளின் ஆதங்கங்கம் ஒவ்வொன்றாய் எதிரொலித்துக்கொண்டிருக்க. முள்ளந்தண்டில் குளிர் ஊசியை ஏற்றியபடி இருந்தது. கால்கள் சிங்கத்தின் குகையை நோக்கி தன்பாட்டில் நடைபோட்டது. காலம் என்னோடு வர மறுக்கின்றது. நானும் அதுவும் எப்போதும் விலகியபடி.

பள்ளிக்கூட யூனிபோமை கஞ்சிபோட்டு அலம்பி அயன்பண்ணி கசங்கமா கை முட்டாமல் றோட்டுக்கு வந்தா தேவிகாவின்ர அம்மா குப்பை லொறிக்குள்ள குப்பையை அள்ளிபோடும் பொழுது எழும் புழுதியில் கோபம் வரும். என்னுடைய கோபம் தேவிகாவை அழவைக்கும். மரங்களும் வெள்ளைக்காரி மாதிரியே. சருகுகளை அள்ளிபோட்டிட்டு முதுகைதடவியபடி திரும்பி பார்த்த அடங்கா பிடாரிமாதிரி தலையை உலுப்பி திரும்பவும் கொட்டிப்போட்டு என்னை பார்க்கும்.. அள்ளின சருகுகளை குப்பை வாளிக்குள் கொட்டும் பொழுது பாடசாலைக்கு போகும் ஒவ்வொரு சிறுவர்களின் பார்வையிலும் தேவிகா தெரிவாள். கொட்டடி பள்ளிக்கூடத்தில் மாமரத்துக்கு கீழே வட்டமாக இருந்து கொண்டு முற்பகல் செய்யின்

பிற்பகல் விளையும் என்று அர்த்தமே புரியாது கத்தி கத்தி பாடமாக்கினதன் அர்த்தம் இப்பொழுதுதான்................ ரொயிலற்றை கழுவும் பொழுது தண்ணீரைவிட கண்ணீரால் கழுவுவது அதிகமாக இருக்கும். வாளியின் கம்பிச்சத்தம் எதையெல்லாமோ நினைவுபடுத்தும். கோடியால் வந்து போகும் ஊத்தை துரை வந்திட்டான் என்று அம்மாவுக்கு அடையாளம் காட்டுவது இந்த வாளியின் கம்பிச்சத்தம்தான். ஒரு நாள் வாளியை வாங்கும் பொழுது ஊத்தை துரையின் விரல் என் கைமீது பட்டுவிட்டது என்பதற்காக இழுத்துவைத்து முழுகவார்த்த அம்மா. இப்போ எதைவைத்து என்னை முழுகவார்ப்பா? பொய்யாகி போன வாழ்க்கையில் இனி சொல்வதற்கு எதுவும் இல்லை கேட்பதற்கும் ஆரும் இல்லை.

தொலைக்காட்சியில் பிரிந்த ஜேர்மனி ஒன்றான நாளைப்பற்றிய விமர்சனம் ஓடிக்கொண்டிருந்தது. வெள்ளைக்காரி ஒரு கையில் பாண்துண்டும் மறுகையில் கோப்பியுமாக மிக ஆர்வமாக பார்த்துக்கொண்டிருந்தா. நானும் ஒரு கையில் துடைக்கிற துணியும் மறுகையில் தும்புத்தடியுமாக ஓடிக்கொண்டிருந்தேன். ஒரு நொடியில் மதில் கீழே சரிந்து கொண்டிருந்தது. பலர் அதன் துண்டுகளை இடிபட்டு எடுத்துக்கொண்டிருந்தார்கள். இரண்டு பக்கமாக உறவுகளை பிரித்து வைத்திருந்த மதிலின் சரிவை வானங்கள் எழுந்து வெடித்து மகிழ்வை தெரிவித்துக்கொண்டிருக்க பிரிந்த உறவுகள் கட்டிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் வடிக்க, எனக்கும் அழுகைவந்தது. இப்படித்தான் ஏ 9 பாதை திறக்கும் பொழுது இருந்ததாக அண்ணா எழுதியிருந்தார். இதை மூடும் பொழுது எத்தனை உயிர்களின் இரத்தம் இந்த மண்ணில் சிந்தியிருக்கும். எத்தனை உறவுகள் பிரிக்கப்பட்டிருக்கும். எத்தனையோ நாட்களாக மெழுகுதிரியை ஏற்றிக்கொண்டு ஒரு ஓரத்தில் நின்று வயது முதிர்ந்த அன்னையர்கள் தங்கள் குழந்தைகளின் பெயர்களை சொல்லிச் சொல்லி அழைத்தார்களாம். அவர்களின் ஒப்பாரிகளை ஏக்கங்களை எல்லாவற்றையும் உள்வாங்கியும் இரங்காத சுவர் இப்போ மண்ணில் சாய்ந்து கிடந்தது. அந்தகாட்சியும், பிள்ளைகளை இறுதிக்காலம் வரையும் காணாது ஏக்கத்துடன் இறந்த அத்தனை அம்மாவைபற்றிய நினைவும் என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருக்க என்கையிலிருந்த பூனையின் கோப்பை என்னை அறியாமலே விழுந்து சிதறியது. ஒரு கணம் நடுங்கிப்போனேன். வெள்ளைக்காரியின் உள்ளிருந்து பிடரியை சிலுப்பிக்கொண்டு சிங்கம் எழும்பியது. என் உயிர் சிங்கத்தின் கோரப்பற்களுக்குள் அகபட்டு துடிக்கும் காட்சி என் கண்முன்னே விரிந்தது. சிங்கத்தின் கண்கள் என் அச்சத்தையும், துயரையும் உள்வாங்கியபடி நெருப்பை கக்க தொடங்கியது. என்னுள் இருந்த இரத்தம் வேர்வையாக கொட்டியது. உடல் அனலின் பிடியில் சிக்கியது. இம்முறை அகதி வேலைக்காரியின் கையிலிருந்த தும்புத்தடியும் ஊத்தை துணியும் அதற்கான இடத்தில்போய் சுழன்று கொண்டு விழுந்தது. வெளியே பாரம் தாங்காமல் மேகம் கீழ் இறங்கிக்கொண்டிருந்தது.

சாந்தினி வரதராஜன்
ஜேர்மனி.



**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை — செய்தி**

**-குரங்கெல்லாம் ஒரு மூஞ்சிதான்**

# வான்புகழ் கொண்ட வள்ளுவம்

## கலைஞர்

## செங்கோன்மை

" மாவலி " மன்னன் மலையாள பூமிக்கதிபதி
" மகாபலி "யென அவன் பெயரை மாற்றியமைத்து

மறைக்கப்பட்டது வரலாறு என்ற செய்தியும் உண்டு
" மகிமைமிகு மறையோர் " எனும் மாய்மாலக்காரர்கள்

மண்போட்டு மூடினர் திராவிடப் பண்பாட்டின் மீது – அதனைக்
கண் மூடிக் கொண்டு ஒப்பிய காலம் – அக்காலம் !

" மாமல்லன் " என்பது பல்லவ நரசிம்மனின் பட்டப்பெயர்–
" மாமல்லபுரம் " என்று அவன் பெயரால் அழைக்கப்பட்ட
ஊர்தான் ;

" மகாபலிபுரம் " என்று இந்நாள் வழக்கில் திரிந்ததாம் !
மடித்து வைப்போம் அந்தப் பழைய கந்தல்களை ! அல்லால்

மறந்தேவிட்டு மறுமலர்ச்சி காண்பதற்கு முனைந்தால்
மலையாளச் சீமையின் மாவலி மன்னன் சோகக் கதை – புரளும் !

இன்றைக்கும் " ஓணம் " எனும் உன்னதப் பண்டிகை பேரால்
இனிதான எழுச்சி விழா, கேரளத்தார் நடத்துகின்றார்.

அடிப்படை என்ன அந்த விழா கொண்டாட?
மாவலி மன்னன் மக்களை மக்களாக மதித்து,

மாசு படரா மனிதநேய ஆட்சியை
மற்றுமுள்ள நாட்டினரும் மகிழ்ந்து பாராட்ட

நடத்திய மாண்பினை நச்சுமனத் தீயோர்
அகற்றிட முனைந்து ஆண்டவன் துணை நாடினர்...

ஆண்டவனோ மாவலி மன்னனை சூதாகத் தோற்கடித்தார்
அவன் வீழ்ந்தபோது கேட்ட வரம்தான்;

" அய்யனே, ஆண்டுக்கொரு முறை நான் கேரளம் வருவேன்
அப்போது அனைத்து இல்லங்களிலும் ஒளி விளக்கேற்ற
வேண்டும் ! "

மாவலியின் கோரிக்கையை மலையாளத்து மக்கள்
மனதார ஏற்றுக் கொண்டு நடத்துவதே " ஓணம் " என்பர்.

உத்தம குணசீலனாய் சித்தரிக்கப்பட்டவன்
மலையாளத்து மாவலி மன்னன்
உபத்திரவம் தருபவனாய் உருவாக்கினர்
தமிழகத்து மகாபலி மன்னனை !

நல்லவனாய் வல்லவனாய் இருந்த கேரளத்து மாவலியை
நரிக்குணத்துக் கூட்டத்தார் சிலர் வீழ்த்திவிட்டார்

மாவலியைத் தமிழ்நாட்டில் மகாபலி என மாற்றிச் சொல்லி
மகாக் கொடியோன் என மனம் போன போக்கில் வசை பொழிந்து ;

புராணீகர் வாழ்வு பெறப் புதுப் புதுக் கதைகளைக் கட்டிவிட்டார் –
மனிதருள் மாணிக்கமாய் மாவலி வாழ்ந்தான் என்று

மலையாள தேசம் புகழ்கின்ற நிலையை
மறைக்கின்றார் இன்னமும் தமிழ்நாட்டு மறையோர்

குடிமக்களை அன்போடு அரவணைத்த
முடி மன்னன் மாவலியின் புகழ் பாடலாம்; குறள் வரியால் !

அம்மன்னனையே பெயர் மாற்றித் தமிழகத்தில்
ஆரியர்கள் முறைசெய்யா மன்னன் எனத் தூற்றி

தானே வீழ்ந்தான் தலைக்கணம் கொண்டோன் என்று
தர்ப்பைப் புல்லால் அவன் கதையைத் தீட்டித்

தலை கீழாய் மாற்றிவிட்டார் தமிழர் சரிதம் !
நிலை குலைய வைத்துவிட்டார் !

எந்த அரசு மக்கள் நெஞ்சில் நிலையாக வாழும்
எந்த அரசு அடியற்ற மரமாய் நில்லாமல் வீழும்

என்ற உண்மையினை
குன்றின் மேலிட்ட விளக்காக

குறளாசான் ஏற்றி வைப்பதையும்
குன்றா ஊக்கமுடன் காணலாம் வாரீர் !

இரு மன்னர்களில் ஒரு குறள் மாவலிக்கும்
இன்னொரு குறள் இதிகாசக் கற்பனையில் சிதைந்த மகாபலிக்கும்

பொருந்துமாறு இருப்பதற்கான முரண்பாட்டிற்குக் காரணம்
முன்னோர் செய்த திருத்தம் தான் !

**" குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு."**

( குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும் )

அதிகாரம் : 55 குறள் : 544

• • • • • • • • • • • •

**' எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்**
**தண்பதத்தான் தானே கெடும்."**

( ஆடம்பரமாகவும், ஆராய்ந்து நீதி வழங்காமலும் நடைபெறுகிற அரசு தாழ்ந்த நிலையடைந்து தானாகவே கெட்டொழிந்து விடும் )

அதிகாரம் : 55 குறள் : 548

# வெளிநாட்டு ஆயுதங்களைப் பயன்படுத்தி தனது சொந்த மக்கள் மீதே இலங்கை அரசு கொடூரமாகத் தாக்குகிறது

முன்னாள் ஜே.வி.பி. முக்கியஸ்தர் சர்வதேச நாடுகளுக்கு கடிதம்.

**1971**ம் ஆண்டு, 1988ம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்திற்க்கு எதிராகப் போராட்டம் நடத்தி, அரசியற் தலைவர்களையும் கல்விமான்களையும் படுகொலை செய்த ஜே.வி.பியினர் இன்று பயங்கரவாதம் பற்றிப் பேசுவதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜே.வி.பி. உறுப்பினர் மருத்துவ கலாநிதி பிரையன் செனவிரட்ன, திருகோணமலைக் குண்டு வீச்சின் பின் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ படையினரின் பொறுமையை பாராட்டிய அதேவேளை, இத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூட கூறவில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இராணுவத் தளபதி மீது கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதல், அதன்பின் திருகோணமலையில் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சு என்பன என்பன குறித்து உண்மை நிலையை விளக்கி அவர் சர்வதேச நாடுகளுக்கு கடிதமனுப்பியுள்ளார். தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் அவர் அனுப்பியுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு:

மனிதாபிமான உதவிகளுக்கான வேண்டுகோள் அல்ல இது. முறைப்பாடும் அல்ல. இலங்கையில் என்ன நடக்கிறது என்பது குறித்து சர்வதேச அரசாங்கங்கள், சர்வதேச ஊடகங்கங்கள், மதத் தலைவர்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் அறிந்து கொள்வதற்காகத்தான் இக்கடிதம் எழுதப்படுகிறது.

கொழும்பில் 25ம் திகதி பெண் தற்கொலைதாரி ஒருவர் இராணுவ மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். இலங்கையின் மிக அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள மிக முக்கியமான பகுதி இது. 100 சதவீத சிங்களவர்களைக் கொண்ட இலங்கை இராணுவத்தினரது உள்உதவியின்றி உள்ளே அப்பெண் சென்றிருக்க முடியாது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்காகக் காத்திருந்த அப்பெண், அவரது வாகனம் முன்பாகத் தனது குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளார். இதில் இராணுவத் தளபதயின் 5 பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர். சரத் பொன்சேகா படுகாயமடைந்து உயிர் பிழைத்துள்ளார்.

அந்தப் பெண் தற்கொலைதாரி விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. அவர்தான் குண்டை வெடிக்க வைத்தவர் எனில் அங்கு நின்று கொண்டிருந்த பாதுகாப்பு படையினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அதேபோல் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிட்டு மகிந்த ராஜபக்ஷவைப் போருக்குத் திரும்ப அழுத்தம் கொடுப்பதற்காக தாக்குதல் நடத்தும் சிங்களத் தீவிரவாதக் குழுவினரைச் சேர்ந்த பெண்ணாக அவள் இருக்கவும் மற்றொரு சாத்தியம் உண்டு.

யாழ்பாணத்தில் ஒரு தசாப்த காலத்துக்கு முன்னதாக படைத்தளபதியாக சரத் பொன்சேகா பணியாற்றிய போது அவரது மனித உரிமைச் செயற்பாடுகள் குறித்து நான் அதிகம் விளக்க வேண்டியதில்லை. நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கைது செய்யப்பட்டு எவ்வித குற்றசாட்டும் இல்லாமல் அல்லது விசாரணையின் பெயரில் காணாமல் போயினர். சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் அவர்களின் சடலம் புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்டன. இதில் அவரது சொந்தப் படையைச் சேர்ந்தவரது உடலும் கூட கண்டெடுக்கப்பட்டது. பலர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச அமைப்புக்கள் மற்றும் சர்வதேச பார்வையாளர்களும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை உறுதி செய்தனர். சரத் பொன்சேகா தான் இதைச் செய்தார் என்று குற்றம் சாட்டவில்லை. ஆனால் அவரது கட்டுப்பாட்டில் இது நடந்தமையால் அவர்தான் பதிலளிக்க வேண்டியவர். அங்கு நடந்தது என்ன என்பதை அவர் அறியாதிருக்க முடியாது.

கொழும்பு குண்டு வெடிப்பு நடந்த சில மணி நேரத்தினுள் கொழும்பிலிருந்து 150 கிலோ மீற்றா் தொலைவில் கிழக்கில் உள்ள திருகோணமலையில் படைகள் விமானத் தாக்குதல் மற்றும் ஆட்லறித் தாக்குதலை நடத்தின. இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட வேகமானது ஒரு திட்டமிட்ட தாக்குதல் தான் என்ற சந்தேகத்தை எழுப்பாமல் இல்லை.

திருகோணமலையின் 7 தமிழ்க் கிராமங்கள் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகியது. இஸ்ரேலிய தயாரிப்பான கிபீா் விமானங்கள் பெருந்தொகையான குண்டுகளை பொதுமக்கள் குடியிருப்புகள் மீது வீசின. அதே நேரத்தில் கடற்படையினரும் பீரங்கித் தாக்குதல்களை கரையோரக் கிராமங்கள் மீது நடத்தினா் ஏப்ரல் 25ம் மாலை 6.30 மணியிலிருந்து 8 மணிவரை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 96 கடற்படைப் பீரங்கிக் குண்டுகள் ஒரே பகுதியில் மட்டும் வீசப்பட்டுள்ளன. அடுத்த நாளும் விமானத் தாக்குதல் நீடித்துள்ளது.

கடலிலும் நிலத்திலும் வானிலிருந்துமாகப் படையினா் தாக்குதல் நடத்தியதால் மக்கள் தப்பியோடுவதற்கு எவ்வித வழியும் இல்லை. ஆயிரக்கணக்கான மக்கள், நோயாளிகள், குழந்தைகள் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளனா். கிபீா் குண்டு வீச்சில், 40 சிறாா் தங்கியிருந்த சந்தோசம் சிறாா் இல்லமும் நேரடித் தாக்குதலுக்குள்ளானது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோரின் முகாம்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இத்தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளன.

அப்பகுதியில் எதுவித மருத்துவமனையும் இல்லை. இரு மருத்துவ மையங்கள் மட்டுமே தற்காலிகமாக இயங்கின. இதர மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாத வகையில் இராணுவத்தினா் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனா்.

இத்தாக்குதலை நியாயப்படுத்தும் விதமாக அரச சமாதானச் செயலகப் பணிப்பாளா் பாலித கோகன, பதில் நடவடிக்கையின் அளவுகோல்களைப் பற்றி கருத்துத் தெரிவித்தாா். மேலும், விமானக் குண்டுவீச்சு மற்றம் பீரங்கித் தாக்குதலானது யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் இல்லை என்றும் தெரிவித்தாா். சமூா் உள்ளிட்ட கிராமங்கள் மீதான அரச படைகளின் தாக்குதல் நியாயமானது. என்றும் பாலித கோகன நியாயப்படுத்தினாா்.

தமிழா் குடியிருப்புகள் மீதான விமானக் குண்டு வீச்சுக்குப் பினனா் 4 மணிநேரம் கழித்து அரசத் தொலைக்காட்சியில் உரையாற்றிய அமைதிக்கான மனிதா் தன்னை பிரகடனம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இராணுவத்தினா் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுவதாகக் கூறினாா். ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிற மகிந்த ராஜபக்ஷ, விமானக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் பீரங்கித் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு ஒரு ஆறுதல் வாா்த்தைக் கூட கூறவில்லை. அவரது பாதுகாப்புப் பேச்சாளா் கெகலிய ரம்புக்வெல, பாதுகாப்புத் தரப்பு விடயங்களுக்கு கால எல்லைகள் எதுவும் இல்லை என்றாா்.

மகிந்த ராஜபக்ஷவை பாராளுமன்றில் ஆதரிக்கும் சிங்கள சந்தா்ப்பவாத அரசியல்வாதிகளான தங்களை மாா்க்சிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்ளும் ஜே.வி.பி.யினா், தாய்நாட்டைப் பாதுகாக்க பயங்கரவாதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை இது என்கின்றனா். இதே தேசப்பற்றாளா்கள் தான் 1971களிலும் 1988களிலும் இலங்கை அரசாங்கத்திற்க்கு எதிராக போராட்டம் நடத்தினா். தங்களது அரசியலுக்கு பெரிதும் அச்சுறுத்தலாக இருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவரைப் படுகொலை செய்தனா்.

அதேபோல், ஜே.ஆா்.ஜயவா்தனவின் உறவினரான கிளாடிஸ் ஜயவா்தன (இந்தியாவிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்யும் நிறுவனத்தின் தலைவராக இருந்தது தான் இவரது குற்றம்), கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்க இருந்த ஸ்டான்லி விஜேசுந்தர உள்ளிட்ட முக்கிய கல்வியாளா்கள் பலரையும் படுகொலை செய்தனா். இத்தாக்குதல்களைச் செய்தவா்கள்தான் பயங்கரவாதம் பற்றிப் பேசுகின்றனா்.

எதிா்கட்சியாக இருக்கக்கூடிய சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்தும் கூட அனுதாப வாா்த்தைகள் வரவில்லை. சுதந்திரக் கட்சியைச் சோ்ந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னா் ஊடகவியலாளா்களிடம் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவா் திஸ்ஸ அத்தநாயக்க, அமைதிப் பேச்சுவாா்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டுமானால் விடுதலைப்புலிகள் தங்களது வன்முறைகளை கைவிட வேண்டும் என்றாா்.

கொழும்புத் தாக்குதலை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் கண்டனம் செய்தன. இருதரப்பும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து பேச்சுவாா்த்தைகளுக்கு திரும்ப வேண்டுமென்று வலியுறுத்தின. இரண்டாவது நாள் குண்டுவீச்சு தொடா்ந்தபோது அவசரமான ஆலோசனை நடத்திய இந்தியா, பாக்

நீரிணைப் பகுதிக்கு மேலதிக கடற்படையினரை அனுப்பியது. நிராயுமபாணிகளான தமிழ்மக்கள் மீதான பீரங்கித் தாக்குதல்களை நடத்திய இலங்கை கடற்படையினருக்கு உதவ. அமெரிக்க அரசின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரிச்சர் பௌச்சர். புலிகள் மீண்டும் யுத்தத்தை தொடங்க இருப்பது விரும்பத்தக்கது அல்ல. உலக நாடுகளுடன் தொடர்பு கொண்டு இத்தகைய நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் கைவிட அழுத்தம் கொடுக்க முயற்சிக்கின்றோம் என்று கூறினார். அரசாங்கத்துக்கு அமெரிக்க பெருந்தொகையான ஆயுதங்களை வழங்கியது. அவைதான் திருகோணமலைத் தாக்குதலுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு கிபீர் விமானங்கள் வழங்கிய இஸ்ரேலிடமிருந்து எவ்விதப் பதிலும் வரவில்லை. சர்வதேச மன்னிப்புச்சபை அனுதாபத்தை தூண்டுகிற வேண்டுகோளை விடுத்திருந்தது. பொதுமக்களை பாதிக்கிற நடவடிக்கைகளை இருதரப்பும் குறைத்துக்கொண்டு சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை கடைப்பிடிக்க வலியுறுத்தியது. இலங்கை அரசாங்கம் பகிரங்கமாக மனித எரிமைகளை. மனித உரிமைச் சட்டங்களை மீறிய நிலையில் கண்டனம் தெரிவிக்கப்படவில்லை.

இந்தக் கொடூரத்துக்கு அரசாங்கம் தான் முதலில் பதில் சொல்ல வேண்டியதில்லை. சொந்த நாட்டின் மக்கள் மீதான தாக்குதலுக்கு ஒரு பொறுப்பற்ற அரசாங்கம் பயன்படுத்தியிருக்கிற ஆயதங்களை யார் வழங்கினார்களோ அவர்கள் தான் பதில்சொல்ல வேண்டும். இலங்கை அரசாங்கம் சொந்தமாக கிபீர் விமானம் தயாரிப்பதில்லை- பல்குழல் எறிகணைகளையோ ரொக்கெட்டுகளையோ தயாரிக்கவில்லை.

அந்த மக்கள் தமிழர்களாகப் பிறந்தது தான் அவர்கள் செய்த ஒரே குற்றம். அந்தக் குற்றத்திற்காக அவர்கள் அனுபவித்து வருவது குறித்து இந்த உலகில் எவரும் கவனிப்பாரில்லை. 1952ம் ஆண்டுகளில் விலங்கியல் துறை மாணவராக இருந்தபோது அந்தக் கிராம மக்களை நான் சந்தித்துள்ளேன். மரத்தடி நிழலில் படுத்திருந்த எம்மை சில இளைஞர்கள நடுஇரவில் எழுப்பினர். இங்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்டனர். இங்கு சில நாட்கள் தங்க முடிவுசெய்து இருப்பதாகக் கூறினோம். அப்போது அவர்கள் தங்களது குடியிருப்புகளுக்குள் அழைத்துச் சென்று உணவு அளித்து எமக்கு தங்கவும் இடமளித்தனர்.

அந்த இளைஞர்கள் இன்று முதியவர்களாக. விமானக் குண்டுவீச்சில் தப்பியவர்களாக சிலர் இருக்கக் கூடும் என்று நம்புகின்றேன். ஒரு படுபயங்கரமான. காட்டுமிராண்டித் தனமான. பொறுப்பற்ற நிர்வாகம் தன்னை 'அரசாங்கம்' என்று அழைத்துக்கொள்கிறது என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. இக்கடிதத்துடன். 'இஸ்ரேல். அமெரிக்கா. இங்கிலாந்து. பாகிஸ்தான். இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் தனது சொந்த மக்கள் மீது நடத்திய தாக்குதல் படங்கள்' என்ற தலைப்பில் திருமலை தாக்குதல் படங்களையும் பிரையன் செனவிரட்ன இணைத்துள்ளார்.

நன்றி: 'தினக்குரல்'. இலங்கை.

**ஜூலை 15, 16 நாட்களில் நடைபெற இருக்கும் இலண்டன் சைவ திருக்கோயில் ஒன்றியத்தின் சைவ மாநாட்டுக்கு சுகி சிவம் அவர்களும், குன்றக்குடி பொன்னம்பலம் அடிகளார் அவர்களும் கலந்து கொள்வதற்கு இசைந்துள்ளார்கள். கணேச மூர்த்தி அவர்களின் அழைப்பை ஏற்று அவர்கள் வருவதாக தமிழர் தகவலுக்கு தெரியப் படுத்தினார்.**

தமிழர் தகவலுக்கு பல உண்மைகளைக் கொண்ட கடிதங்கள் வருகின்றன. பெயர், விலாசமில்லாத காரணத்தினால் அவற்றைப் பிரசுரிக்க முடியாமல் உள்ளது. உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவர நினைப்பவர்கள் உங்கள் பெயரினைப் போடுவதில் தவறில்லையே.

# ஆனி மாதப்பலன் (ஜுன் 15 - ஜுலை 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

**மேடம்** அதிமேதாவிகளே ! சுக்ரன் பலமாக இருப்பதால் பணம் வரும். பேச்சில் இனிமை கூடும். பிரபலங்கள் உதவுவார்கள். பழைய கடன் தீரும். வழக்கு சாதகமாகும். மனைவி வழியில் ஆதாயம் உண்டு. வீடு, வாகனம் வாங்குவீர்கள். அம்மாவின் உடல் நலம் பாதிக்கும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்யோகத்தில் வேலைப் பளு கூடும். வாகன விபத்து வரக்கூடும், கவனம் தேவை. எதிர்பாராத இனிய சம்பவங்கள் நிகழும் மாதமிது.

**இடபம்** எதிலும் எளிமையை விரும்புபவர்களே ! தடைகள் உடைபடும். எதிரிகள் அடங்குவார்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். பண வரவு உயரும். உயர் ரக ஆடை ஆபரணங்கள் சேரும். வேலை கிடைக்கும். திருமணம் முடியும். சொந்த ஊரில் செல்வாக்கு கூடும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். நல்ல வேலையாட்கள் அமைவார்கள். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டு. புது வாய்ப்புகளும் தேடி வரும். புது சகாப்தம் படைக்கும் மாதமிது

**மிதுனம்** சமயோசித புத்தி உள்ளவர்களே ! குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் தீரும். எதிர்பாராத பண வரவு உண்டு. செலவுகளால் திணருவீர்கள் சுப காரியங்களை முன் நின்று நடத்துவீர்கள். வி.ஐ.பிக்கள் உதவுவார்கள். வீடு கட்டும் பணி தொடரும். மனை வாங்குவீர்கள். கண் எரிச்சல், கால், காது வலி வந்து விலகும். வியாபாரத்தில் கடுமையான போட்டிகள் குறையும். உத்யோகத்தில் திறமைகள் வெளிப்படும். வெற்றிக்கு வித்திடும் மாதமிது.

**கடகம்** இராஜதந்திரிகளே ! மனைவி மக்களின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்களால் அலைச்சல் ஏற்படும். ஆடை ஆபரணம் சேரும். தலைசுற்றல் வயிற்றுவலி வந்துபோகும். பிள்ளைகளால் பொருள் செலவு அதிகமாகும். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிக்க புது வழி பிறக்கும். உத்யோகத்தில் வேலைப்பளு கூடினாலும் பாராட்டுகள் கிடைக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் காலமிது

**சிம்மம்** சிந்தனை சிற்பிகளே ! அடி மனதில் இருந்த ஆசைகள் நிறைவேறும். தாழ்வு மனப்பான்மை நீங்கும். பணவரவு அதிகரிக்கும். அலைச்சலும் வீண் விரயங்களும் அதிகரிக்கும். யாருக்காகவும் ஜாமீன், காரண்டர் கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்யலாம். புரோக்கம் மூலம் பணம் வரும். உத்யோகத்தில் எதிர்ப்புகள் அகலும். புது வாய்ப்புகள் வரும். சகோதரரால் அலைச்சல் உண்டாகும். காதல் இனிக்கும். போராடி இலக்கை எட்டும் மாதமிது.

**கன்னி** கடமை தவறாதவர்களே ! உங்களின் திறமைகள் யாவும் வெளிப்படும். ஆசைகள் எல்லாம் நிறைவேறும். அரைகுறையாக நின்ற பல வேலைகள் உடனே முடியும். எதிர்பாராத பண வரவு உண்டு. ஆடை ஆபரணம் சேரும். விலையுயர்ந்த வாகனம் வீடு வாங்குவீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் அதிகரிக்கும். அரசு வேலைகள் உடனே முடியும். வேலை கிடைக்கும். உத்யோகத்தில் பதவி உயரும். திருமணம் முடியும். கனவுகள் நனவாகும் மாதமிது.

**துலாம்** துணிச்சலானவர்களே ! பணம் வரும். பயணங்கள் அதிகரிக்கும். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வாகனம் வாங்குவீர்கள். இட மாற்றம் ஏற்படும். புது நண்பர்கள் அறிமுகம் ஆவார்கள். தந்தை வழி சொத்துக்கள் கைக்கு வரும். வியாபாரத்தை அபிவிருத்தி செய்வீர்கள். உத்யோகத்தில் பழைய சம்பள பாக்கி கைக்கு வரும். புதியவர்களால் அதிரடி மாற்றம் வரும் மாதமிது


**விருச்சிகம்** விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். நோய் விலகும். அழகு ஆரோக்யம் கூடும். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். திடீர் பயணங்களால் ஆதாயம் அடைவீர்கள். வியாபாரத்தில் புதிய தொடர்புகளால் லாபம் கூடும். பழைய சரக்குகள் விற்று தீரும். உத்யோகத்தில் அதிகாரிகள் மதிப்பார்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தடைகள் நீங்கி சாதிக்கும் மாதமிது

**தனுசு** தன்னலம் இல்லாதவர்களே ! மற்றவர்களின் விவகாரங்களில் அனாவசியமாக தலையிட வேண்டாம் சிறு சிறு விபத்துக்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. விரய செலவுகள் கட்டுக்குள் அடங்காமல் போகும். விலையுயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரம் உத்யோகம் சுமார்தான். முன்னெச்சரிக்கை தேவைப்படும் மாதிது.

**மகரம்** நுண்ணறிவு அதிகமானவர்களே ! சுக்கிரன் வலுவாக இருப்பதால் பணவரவு அதிகரிக்கும். விலையுயர்ந்தப் பொருட்கள் வீடு வந்து சேரும். வீடு, வாகனம் வாங்குவது விற்பது சுலபமாக முடியும். புது ஒப்பந்தங்கள் வியாபாரத்தில் கையெழுத்தாகும். உத்யோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். பழைய நண்பர்கள், உறவினர்கள் உதவுவார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த மாதமிது.

**கும்பம்** கொடையுள்ளம் கொண்டவர்களே ! உங்களைப் பற்றிய வதந்திகள் நீங்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். அசையாச் சொத்துக்கள் வாங்குவீர்கள். வாகனத்தொல்லை விலகும். உத்யோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு. வியாபாரத்தில் போட்டிகள் குறையும். புது முதலீடுகள் செய்வீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். மன நிறைவு தரும் மாதமிது.

**மீனம்** விகடகவியாக பேசுபவர்களே ! வி.ஐ.பிக்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் கணவன் – மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். சந்தேகம் தீரும். பிள்ளைகளால் செலவுகளும் அலைச்சலும் வந்து போகும். பூர்வீகச் சொத்தை மாற்றம் செய்வீர்கள். வியாபாரம் லாபம் தரும். உத்யோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். எதிர்ப்புகள் அகலும் மாதமிது.



Tharani
Jewellery
54 Ealing Road
Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777




GOLDMAN
...home
wealth
satisfaction !
Mortgages
Life Assurance
Pension
Loan Arangement
Accountancy
Property Sales
Property Lettings
Property Valuations
V Theebaraj
Mortgages
T Yathavan
Accountancy
S Mani
Sales & Lettings
219 The Broadway, Southhall, Middlesex, USB 1NB
Tel : 020 8867 7711 020 8867 7733
Fax : 020 8867 7722 020 8867 7744
www.goldmanfinance.com www.goldmanestate.com
info@goldmanfinance.com info@goldmanestate.com
GOLDMAN TRAVEL
& TOURS LTD
219 The Broadway, Southall
Middlesex, UB1, 1NB
Specialists to Srilanka and India
Our service Includes
Air Ticket Bookings
Holiday Packages
Travel Insurances
Hotel Bookings
For your Ticket booking to
any destination in the world
Contact
Theebaraj or Yathavan
Tel : 0208 867 1050
Fax : 0208 867 7744

WEST CROYDON-ல்


# BEST FOOD

259 - 261, London Road
West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 020 8686 4577





ரமணி சந்திரனின்
புத்தகங்கள்
£2க்கு கிடைக்கும்



HARROW-வில்

# BEST FOOD

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

சுகி சிவம் அவர்களின்
அனைத்துப் புத்தகங்களும்
பெற்றுக்கொள்ளலாம்

# இந்திரா செபஸ்தியன் சட்டத்தரணிகள்

1 Central Parade, Station Road,
Harrow, Middlesex HA1 2TW

**IMMIGRATION**

குடிவரவு தஞ்சம் கோருவோர் விண்ணப்பம் (asylum)
கல்வி /தொழில் / உயரிர்தொழில்நுட்பம் (work permits / HSMP / SEGS / SBS)
வியாபாரப்புலம்பெயர்தல் (Business / innovator / investor)
பிரித்தானிய பிரஜதாவுரிமை
பிரித்தானிய - இலங்கை இரட்டை பிரஜாவுரிமை! (Dual citizenship)
திருமண அனுமதி விண்ணப்பம்
ஐரோப்பியர்களின் இருப்பிட விண்ணப்பம், மற்றும் பிரித்தானியாவில் உறவின அகதிகள் Sponsor

**PROPERTY**

கடை / வீடு வாங்கல், விற்றல்
வீடு-கடை உரிமையாளர் - குடியிருப்பாளர் பிணக்குகள்
வியாபாரஸ்தாபன குத்தகை
On & Off licence

**வியாபார பிணக்குகள் - ஒப்பந்தங்கள்**
**Business disputes & All types of Agreements**

கம்பனி உருவாக்கம் - பிணக்குகள் - பாங்ரப்ட் ( Bankruptcy )
சிவில் வழக்குகள்
குடும்பம் ( Family ) -
தொழில் பிணக்குகள் ( Employment)
உயில் எழுதுதல்
Charity & Trust Related Work

Intellectual Property / Information Technology

வியாபார இலச்சினை (Logo / Trade Mark)
எழுத்தாக்கம் - இசையாக்கம் (Copy rights)
வெப்சைட் - கொம்ப்யுட்டர்
விஞ்ஞான கண்டுபிடிப்புகள் (Patents)
..................பதிவுசெய்தல்

உடனடி PR ஒரே நாளில் எடுத்துக் கொடுப்பதற்கு
ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

Tel : 0208 427 3303 Fax : 0208 427 3313

HOUNSLOW-வில்

# BEST FOOD

364 - 366, Bath Road
Hounslow Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

மலிந்த விலையில்
மிகுந்த பொருட்கள்



## கர்நாடக இசையுலகில் ஒரு யுகபுருஷர்



# மணக்கால் S. ரங்கராஜன் பாட்டு

பக்கவாத்தியங்கள்

A.G.A. ஞானசுந்தரம் – வயலின்

மணக்கால் R. ஸ்ரீராம் – மிருதங்கம்

R.N. பிரகாஷ் – கடம்

K. சிதம்பரநாதன் – மோர்சிங்

24.06.2006 சனிக்கிழமை மாலை 6.00 மணி

இடம்

## லண்டன் சிவன் கோயில் கலையரங்கம்

4AClarendon Rise Lewisham London SE13

09.07.2006 ஞாயிற்றுகிழமை மாலை 6.00 மணி

இடம்

## சிவயோகம் கலையரங்கம்

அருள்மிகு லண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

180 – 186 Upper Tooting Road Tooting London SW17

அனுமதி

ஒரு நிகழ்வுக்கு 10.00 பவுண்கள் இரு நிகழ்வுகளுக்கும் 15.00 பவுண்கள்

தொடர்புகளுக்கு

தமிழர் தகவல் **0208 4802836** இ. பத்மநாப ஐயர் **0208 4728323**

### கலைமாமணி மணக்கால் ரங்கராஜன்

மிகப்புகழ் வாய்ந்த சங்கீதப் பரம்பரையில் பிறந்து, சங்கீத வித்வான்களில் முதல்வராகத் திகழும் மணக்கால் ரங்கராஜன் இன்றைய முன்னோடிகள் என்று கருதப்படும் வித்வான்களுக்கும் முன்னோடியாக திகழ்கிற ஒரு நேற்றையக் கால கலைஞர். ராக ஆலாபனையில் விஸ்தாரத்திற்கும், எந்தவித மழுப்பிமில்லாத தெளிவான பிருகாவிற்கும், மூன்று ஸ்தாயிகளிலும் சஞ்சாரம் பண்ணுவதற்கும், நிரவல் மற்றும் கல்பனை ஸ்வரம் பாடும்போது கடினமான தாள நடை பிரமாணங்களைக் கையாள்வதிலும் மிகப்பெற்ற மணக்கால் ரங்கராஜன், புது ராகங்களையும் உருப்படிகளையும் கச்சேரிகளில் அறிமுகப்படுத்துவதில் நிபுணர். கர்நாடக சங்கீதத்தில் மனிதத்திறனின் எல்லைகளையெல்லாம் தாண்டும் வகையில் இவரின் நேற்றைய காலக் கச்சேரிகள் அமைந்திருந்தது. இன்றைய வகையிலும் வித்வான்களின் வித்வானாக அவர் திகழ்கிறார்.

**விளம்பர உதவி : எவரெஸ்ட், மகராசி, கற்பகம்**



கலப்படமற்ற தூய தானியவகைகள்,
புதிது குன்றாத கடல் உணவு வகைகள்,
பச்சை நிலையில் பொலிவுறும்
இலங்கை, இந்திய, தாய்லாந்து
மரக்கறி வகைகள்,கார நறுமண
உணவுப் பொருட்கள், மதுபான
வகைகள் வீடியோச் சுருள்கள்,
தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகள்
விழாக்களுக்கான பொருட்கள்
அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்

மாபெரும் மலிவு விற்பனை

இன்முக உபசரிப்புடன் லூசியம் Lee வீதியில்
மொத்த விலையில் ஒரு சில்லரைக் கடை

# VM CASH & CARRY

282, Leehigh Road, London
Tel : 020 8852 3561


## அவளைக் கண்டேன் !



உள்ளம் என்னும் ஆலயத்தில்
ஜோதி வடிவில் அவளைக் கண்டேன்
கள்ளமில்லா குழவி நகைப்பில்
கருணை வடிவில் அவளைக் கண்டேன்
சித்தர் கூறும் அருள்வாக்கில
வார்த்தை வடிவில் அவளைக் கண்டேன்
தன்னலமற்ற தியாகியிடம்
சேவையின் வடிவில் அவளைக் கண்டேன்
மணிபல்லவத் தீவின் சிரசினிலே
சுயம்பு வடிவில் அவளைக் கண்டேன்
- நாகமுல்லை

# திருமண தகவல்

## முற்றிலும் இலவச சேவை



இந்தப் பக்கத்தில் உங்கள்
திருமணத் தகவல் வெளியிட வேண்டுமாயின்
தமிழர் தகவலைத் தொடர்புகொள்ளுங்கள்

Born : 20.01.79
படிப்பு A.L MED உயரம் 5'3"
மதம் இந்து, நட்சத்திரம் சித்திரை / 1
தற்போதைய வதிவிடம் சென்னை

Born : 05.04.82 படிப்பு Graduate Very Fair
மதம் இந்து, உயரம் 5'3" நட்சத்திரம் மகம் / 4
Qualified Bharatanatyam Dancer, Classical Mucisian
தற்போதைய வதிவிடம் சென்னை,

### தகுந்த வரன்களை பெற்றோர் தேடுகிறார்கள்

Born : 06.03.68, Fair,
Udivil Girls
உயரம் 5'5"
நட்சத்திரம் ரோகிணி
மதம் வேதம், கல்வி O/L
தற்போதைய வதிவிடம் சென்னை

Born : 02.07.70, Fair,
படிப்பு I.T
அல்வாய் கரவெட்டி, உயரம் 5'5"
நட்சத்திரம் அவிட்டம் / 4
மதம் இந்து
தற்போதைய வதிவிடம் Colombo

Born : 29.03.72
Florist Expert Decorator
படிப்பு A.L உயரம் 5'4"
நட்சத்திரம் உத்திரம்
மதம் இந்து
தற்போதைய வதிவிடம் சென்னை

Born : 22.08.78
படிப்பு B.E (Computer)
Very Fair
உயரம் 5'5"
நட்சத்திரம் ரேவதி
மதம் இந்து
தற்போதைய வதிவிடம்
Colombo

Born : 04.05.79
படிப்பு A.L MED
உயரம் 5'3"
நட்சத்திரம் ஆயிலியம்/2
மதம் இந்து
தற்போதைய வதிவிடம்
சென்னை

தொடர்புகளுக்கு : 9144 2389 2367


Happy Tex
6 Ealing Road Wembley
Middx HA0 4TL
Tel : 020 8903 0782
Fax : 020 8903 4680
• Money Transfer
• Textiles
• Watches
• Jewellery
• Rice Cookers
• Perfume
• Wedding Suits



கானக்குயில்
2006
இலண்டன் லோகன் மண்டபத்தில்
1.07.2006 சனிக்கிழமை அன்று நடைபெறும்
உங்கள் இருக்கைக்கு முந்திக் கொள்ளுங்கள்



SAMRAS
VIDEO
17 Tooting High Street
Tooting, London SW17 0RX
Tel : 020 8672 9300
லண்டனில் கலை - இசை - சங்கீதம் எதுவானாலும் எங்கள் இடத்துக்கு
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை விளங்கும்.
தமிழ், ஹிந்தி, மலையாளம், தெலுங்கு வீடியோ, ஓடியோ சீடி மற்றும்
புதிய, பழைய திரைப்படங்கள், திரைப்பாடல்கள்,
கர்நாடக இசை, பக்திப்பாடல்கள்
இன்னும் பல அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
சாம்ராஸ் வீடியோ


STARR ESTATES LIMITED
CENTRAL PARADE
Station Road Harrow Middlesex HA1 2TW
Tel : 020 8427 5328
Mob : 07956 543 044 Fax : 020 8863 5705
Email : info@starrestatesltd.co.uk Web : www.starrestatesltd.co.uk
ESTATE AGENS - VALUERS - SURVEYORS
PROPERTY CONSULTANTS
Advice and assistance on purchase of investment abroad
including Europe, Middle East ( Dubai ) and Far East
Please call us with your requirements
ADVICE ON FINANCIAL SERVICES
PROVIDED BY QUALIFIED ADVISORS
* Sales
* Property Management
* Lettings
* Surveyors
* Valuations
* Mortgages
* Re-Mortgages
* Commercial Loans
* Buildings & Contents Insurance
* Life Insurance


Prime Food & Wine
News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables
மணங்கவரும் மளிகைச்சாமான்கள், மென்பானங்கள்
மதுபான வகைகள், பழங்கள்
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில் நிறைந்த சேவையைப் பெற
எம்மை நாடுங்கள்
118, Tooting High Street
London SW 17 ORR
Tel : 020 8682 3777


சிறந்த புதிய
சினிமா படங்களின்
CDக்கும்
DVDக்கும்
AYNGARAN
Ayngaran Video - Tooting
30 High Street Collierswood
Tooting SW 19 2AB
Tel : 020 8540 1500


R R METAL WORK
Railings
Staircases
Gates
Window Grills
Fabrication
தமிழில் தொடர்பு கொள்ள :
Kumar
Tel : 020 8648 8207
Mob : 07753 200 261


MIERRA
JEWELLERY MART
Gems & Jewellery
34 London Road Tooting
London SW 17 9SP
Tel : 208 648 7750
www.meera_jewellery.com
பழைய தங்கத்தில் புத்தம் புதிய நகைகள் செய்து கொள்ள, அதிர்ஷ்ட
நவரத்தின கற்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத் தேவையான 22ct சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள


Link AIR
Travels Limited
ATOL PROTECTED
IATA
SriLankan
Special Fares to : Colombo, Madras, Singapore, Canada
We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO
361 London Road, Croydon, Surrey CR0 3PB
Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579

# காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

Chennai **ARS Tours** London **Euro Travels & Tours Ltd**

## இணைந்து நடத்தும்

# ஆன்மிகச் சுற்றுலா



இலண்டனில் வாழும்போதே
பாடல்பெற்ற தலங்களை தரிசியுங்கள்.
அதற்கு ஏற்றதாக உங்கள்
பிரயாணங்களை ஒழுங்கு
செய்து தருகிறோம்.
சிவ தலங்கள், முருக தலங்கள்
யாவும் அவசியம்
தரிசிக்கப்பட வேண்டியவை



111-B Loampit Vale, Lewisham London SE13
Tel : 0208 465 9666 Fax : 0208 465 9888



## ரிஷிகேஷ்
## 5 நாள் சுற்றுலா

இலண்டன் - டெல்லி விமானம்
டெல்லி - ரிஷிகேஷ்
A/c car (4 hours journey )
**டிக்கெட், தங்குமிடம் வசதி**
**சாப்பாடு உட்பட £ 750 மட்டும்**

**ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமையும் சீரடி சாய்பாபாவை தரிசிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.**

ஒவ்வொரு செவ்வாயும் பிரிட்டிஷ் ஏர்வேஸில் சென்னை அடைதல். புதன் கிழமை *Pune* அடைதல் *A/c Car* மூலமாக *Shirdi* அடைதல் (4 மணி நேர பயணம்) வியாழக்கிழமை சாய்பாபாவை தரிசிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. வெள்ளிக்கிழமை சென்னை. சனிக்கிழமை இலண்டன்

**டிக்கெட், தங்குமிடம் வசதி, சாப்பாடு உட்பட £ 750 மட்டும்**

திருக்கயிலாய யாத்திரை 17 நாட்கள் ( மாதந்தோறும் )
புறப்படும் நாள் : மே - செப்டம்பர் கட்டணம் £ 1350



# சிதம்பரம் நடராசர் கோயில்

கோயில் என்று பொதுவாக வழங்கினாலே சைவத்தில் சிதம்பரம் நடராசர் கோயிலைத்தான் குறிக்கும்.

இறைவன் நடராசா அம்பலகூத்தர், இறைவி சிவகாமி சிவகாமசுந்தரி. இக்கோயிலில் ஐந்து சபைகள் உள்ளன. சிற்றம்பலம் - பொன்னம்பலம் (கனகசபை) பேரம்பலம் - திருத்தசபை - இராசசபை. நான்கு கோபுரங்கள். தெற்கு வாசல் கோபுரம்தான் நுழைவாயிலாக அமைந்துள்ளது. இக்கோயிலை பூலோக கயிலாயம் என்றும் சொல்லுவார்கள். தில்லைவாழ் அந்தணர்களாகிய தீட்சிதர்களின் கட்டுப்பாட்டில்தான் இத்தலம் உள்ளது.

சிதம்பரத்தில் நடந்த அரிய செயல்கள்.

1. மாணிக்கவாசகர் புத்தரோடு வாதாடி ஊமை பெண்ணை பேச வைத்தது.

2. உமாபதி சிவம் கொடி கவி பாடி கொடியேற வைத்தது.

3. திருப்பல்லாண்டு பாடி சேத்தனார் தடைபட்ட தேரை ஓடவைத்தது.

4. திருமுறைகளை வெளிப்படுத்தியது.

இப்படி பல உண்டு.

தரிசிக்க முக்தி தரும் தலம் சிதமபரம்


இலங்கைவாழ் ஈழத்தமிழர்களின் வழிபாட்டுக் கோயில்தான் சிதம்பரம். பல கோடி ஏக்கர் நிலங்கள் சிதம்பரத்துக்கு சொந்தமாக உள்ளன.

ஆகவே சிதம்பரம் - கனகசபைக்கு கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் ஈழ மக்களின் உதவியை நாடி நிற்கிறார்கள். தமிழர் தகவலின் இரண்டு இதழ்களில் இதன் விளம்பரம் பிரசுரமாகியது. ஆனால் சிதம்பரமா. நாங்கள் வள்ளிபுரக் கோயிலுக்குக் கொடுக்கலாம். ஈழக்கோயிலுக்குக் கொடுக்கலாம் என்று நினைக்கிறார்கள்.

உங்கள் பணம் சிதம்பரத்துக்கு செல்ல பலன் இருந்தால் மட்டுமே செல்லும். எத்தனை கோடி இருந்தாலும் சிவனுக்கு செய்யும் பாக்கியம் கிடைத்தால்தான் கொடுக்க முடியும். இந்த விளம்பரம் சிவனின் அருள்.

தமிழர் தகவலால் எதுவுமில்லை.


பதிப்பாசிரியர் : சிவானந்த சோதி




# JK Gold House & Fashion House

314-316 London Road Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677

தமிழர் தகவல்
இலவச இதழை எங்களிடம்
பெற்றுக்கொள்ளுங்கள்





The Fascinating
Fashion Jewellery
Mithus
Jewellery
322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792
Diamonds
Palace
76 Tooting High Street London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814
தமிழர் தகவல் இலவச இதழை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்